Then, Sir, I wish to say a few words with regard to the educational policy. With regard to the policy pursued in the matter of secondary education, there is no quarrel about it. Even beyond the High School standards, regional languages can be introduced. Please note, I am using the words 'can be'. I only say it should not be introduced compulsorily. If you do that, you will be doing a disservice to the student population. We do not have enough text-books in regional languages. We do not have qualified teachers who can undertake teaching in regional languages. If we introduce straightway Tamil, Telugu or Malayalam as the medium of instruction in the colleges, with the equipment we have at present, our whole experiment will become an utter waste. For providing a proper alternative equipment we need 100 lakhs of rupees. If we offer a thousand rupees to any one for writing a book, it will not be of any use. He will write only something trash. If we offer Rs. 20,000, perhaps, one will be able to take proper care and write a book. Then only standard books will be published. Particularly in regard to technical subjects, it is very essential that standard books must be written, because at present we have not got a proper vocabulary. I am glad that the Government have made arrangements to appoint a Committee for this technical work. I am only pleading for time. I am not opposing the new movement for introducing the regional languages as the medium of instruction in colleges. Till such time as we are able to provide for the University Classes proper tuition by way of good teachers, books and libraries and other things it will be necessary that regional languages should not be introduced compulsorily as the medium of instruction. That is all the more necessary why we should continue to have English as the medium. Quite apart from the use of English as the medium in colleges, we should consider English language by itself. English language to-day is an international language. In Germany, in France, in many other countries of the world, English language is taught. English language has become an international one. It is not the language of our past rulers only. It is the language of the world. We must call that language by some other name and not English. We may call it as an international language. For the sake of knowledge, even though we study Tamil or Hindi, we should not give up English. Our students are capable of studying English. Our young students can read the regional language, English language and any other language. They can read Hindi even

[Raja Muthiah Chettiar of Chettinad] [29th September 1955

if it should be adopted later on as one of the languages to be read. It is only difficult for persons who are aged 50 years and more to learn languages. It is always easy to learn three languages. As a matter of fact, I have been pleading that the young boy of to-day is as intelligent as the young boy of 50 years ago. In this connexion, compared to the standards obtaining some twenty years ago, the standards of our boys have gone down and have gone to the lowest. That is why, there is a proposal to add one year more to the high school education. By doing so, we are penalising the students and their parents. Why should it not be possible to teach the children properly within 11 years? The authors of text-books and others including Text-Book Committees are responsible for lowering of standards. Previously when a person wrote a book or published it, he did not expect to get more than a few hundreds of rupees. Now, if a person writes a text-book and if it is approved by the Text-Book Committee, he is able to make Rs. 20,000 or more. The standard of teachers obtaining in High Schools is very low. I will only ask the Hon. Finance Minister who is happily the Minister in charge of Education to take steps to Stiffen the High School standards. I have no objection to Tamil being the medium of instruction. I find that only hundred lines of Tamil poetry are to be got by heart. Nowadays it has become fashionable to speak of visual education. Why not prescribe more lines of Tamil poetry to be got by heart? Education must be given for education's sake. It must be given in a proper way. People talk of Gurukula system. It is all wrong to talk of that. In olden days, students used to learn at the feet of their Guru for hours and hours and for years and years. But who are our teachers? The boy of yesterday is the teacher of to-day. Luckily our State is much better in this respect compared to the conditions prevailing in Poona and Bombay where 6,000 and 7,000 students study in each college and where shift systems are being observed. Such a situation had not arisen here because of the large number of colleges that have been started. Our boys are capable and the only thing required is that the boys should be properly taught. I should entreat the Hon. Minister for Education to take steps to achieve that objective. In regard to the changes to be introduced, we are pleading for time. I do hope that the views expressed on the floor of this House will go a long way in enabling the Government to come to a proper decision in regard to these matters. Not only that. Let us hope that our own representatives in Delhi will lead a deputation to the Prime Minister and tell him that two-thirds of the legislators in India who represent the non-Hindi speaking people, though they are not against Hindi language as such, feel strongly that English should be retained for a long time. I congratulate the Madras University on the very useful suggestions that they have made in this connexion. In that resolution, they have pleaded for the retention of English for 30 years. It does not prevent the introduction of the regional language as the medium gradually. We object to the Government of India introducing

29th September 1955] [Raja Muthiah Chettiar of Chettinad]

Hindi as the medium. At the same time let us not be open to the charge of our being against the introduction of Tamil as the medium. My only plea is that our support for Tamil should not delude us from seeing the realities.

SRI M. KALYANASUNDARAM : ஆனால் நீங்கள் தமிழில் பேசுவதே இல்லையே.

RAJA MUTHIAH CHETTIAR OF CHETTINAD : ரிப்போர்ட்டர்கள் நல்ல முறையில் எழுதவேண்டும் என்கிற ஆசையினால் தான் ஆங்கிலத்தில் பேசுகிறேன். எனக்கு தமிழின்பேரிலுள்ள ஆர்வம் மற்றவர்களுக்குள்ள ஆர்வத்தைவிட குறைச்சலில்லை, தமிழை பலப்படுத்தவேண்டியதுதான். கவர்ன்மெண்டார் ரூ. 10,000 செலவழித்தாவது, ஏன், ஒரு கோடி ரூபாய் வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளட்டும். பத்து வருஷத்திற்குள்ளாவது தமிழில் எல்லா கல்விப் புத்தகங்களையும் கொண்டுவர ஏற்பாடு செய்யவேண்டும். எல்லோருக்கும் தமிழின் பேரில் ஆர்வம் இருக்கத்தான் செய்கிறது. நான் சொல்வது, ஆங்கிலத்தில் உள்ள படிப்பை விட்டு விட்டு, காலேஜில் equipment-கள் வீணாகப் போவதைப் பார்த்துக்கொண்டிருக்கலாமா ? தமிழில் ஒருவன் எஸ். எஸ்.எல்.வி. வரை படிக்கிறான். ஆனால் அவன் ஒரு 3-அடிப் பாட்டைக் கூட ஒப்பிக்கக்கூடாது. காரணம் உபாத்தியாயருக்கே அதை ஒப்பிக்கத் தெரியாதே ! அதற்காக பையன்களையும் ஒப்பிக்கக் கூடாதென்று உபாத்தியாயர் சொல்கிறார். பாரதியார் பாட்டை ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மி பாடினால் நன்றாகயிருக்கிறது. ஆனால், பாரதியார் பாட்டில் 25 வரி கூட மனப்பாடம் செய்யவேண்டாமென்று உபாத்தியாயர் சொல்கிறார். காரணம் அதனால் 'mind' derange ஆய்விடுமாம். நாங்கள் படித்த காலம் வேறு. இப்பொழுது கேள்வித்தாளை வாங்கிப் பார்க்க வேண்டும். "இப்போது ராமலிங்கம் பேசுகிறார், இப்போது கல்யாணசுந்தரம் பேசுகிறார், இப்போது முத்தையா செட்டியார் பேசுகிறார்" என்று கேள்வித்தாளில் இருக்கும். முத்தையா செட்டியார் என்பது சரியான விடை என்றால் அதை "டிக்" செய்யவேண்டும். இது படிப்பா என்று கேட்கிறேன். இந்த சந்தர்ப்பத்தில் முக்கியமாக கல்வி மந்திரியிடம் ஒரு விண்ணப்பம் செய்து கொள்கிறேன். கூடிய சீக்கிரத்தில் சென்னை ராஜ்யத்தில் இருக்கிற கல்வி நிலைமையைப்பற்றி ஆலோசிக்க 2, 3 நாட்கள் இதே மாதிரி ஒதுக்கி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் பற்றி ரெஸலூஷன் ஒன்றும் வேண்டாம். அங்கத்தினர்கள் தங்கள் அபிப்பிராயத்தைச் சொல்ல வேண்டும்.

இப்பொழுது பையன்கள் வீணாகக் காலத்தைப் போக்கிக் கொண்டிருக்கிறார்களென்று சொல்ல நான் தயாராயிருக்கிறேன். Library களில் பையன்கள் படிப்பதில்லை. சினிமாக் கொட்டகையைப்போல் பார்த்துச் செல்கிறார்கள். இதற்கு பையன்களைக் குற்றம் சொல்வதில் பிரயோஜனமில்லை. நாம் செய்திருக்கும் ஏற்பாடு தான் சரியில்லை. Mr. Speaker, Sir,

SRI P. RAMAMURTHI : ஸ்ரீ கல்யாணசுந்தரம் குறுக்கிட்டதின் விளைவாக கனம் அங்கத்தினர் ராஜா முத்தையா செட்டியார் அவர்கள் தமிழில் இவ்வளவு நேரம் பேசினார். ஆனால் இப்பொழுது "Mr. Speaker Sir," என்று ஆரம்பிப்பது நடுவில் வேட்டுப் போடுவது போலிருக்கிறது.

RAJA MUTHIAH CHETTIAR OF CHETTINAD : சட்ட சபையில் தமிழில் ஆர்வமுள்ள அங்கத்தினர்களை தமிழில் பேசமுடியவில்லையென்று சொல்லும் பொழுது, கல்லூரிகளில் வேண்டிய வசதிகள் ஏற்படுத்துவதற்கு முன்னால் ஆங்கிலத்தை விட்டுவிடக் கூடாதென்பதற்கு இதுவே ஒரு அத்தாட்சி. நாம் இங்கு மணிப்பிரவாளமாகத்தான் பேசிக் கொண்டிருக்கிறோம். ஆகையால், கல்லூரிகளிலுள்ள வசதிகளைப் பெருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[Raja Muthiah Chettiar of Chettinad] [29th September 1955

11-20 a.m. Sir, I shall wind up in a minute or two. I only appeal to the Government to continue the realistic approach that they have made to this subject. I have no doubt that their effort will meet with success. The resolution passed by the University of Madras deserves the sympathy and support of the Government and everyone else.

SRI M. KALYANASUNDARAM : இந்திய யூனியன் அரசாங்கத்திலும், நமது மாகாண அரசாங்கத்திலும் ஆட்சி மொழி (official language) எந்த மொழியாக இருக்க வேண்டுமென்பது கனம் செட்டியார் அவர்களின் அபிப்பிராயம் ?

RAJA MUTHIAH CHETTIAR OF CHETTINAD : In the beginning itself I said that the regional languages of Tamil or Malayalam could be adopted in the colleges and the Legislature. I do not object to changing the official language of the State thirty years hence. But I do object to saying that from tomorrow morning no member shall speak in English. For some thirty years at least, members should be allowed to speak in Tamil, Malayalam or English at their option. Could anyone have imagined twenty-five years ago that a majority of the members of the Madras Assembly would be speaking in Tamil? One by name Sri B. V. Narasimhaswami was a member of the Madras Legislative Council about thirty years ago. When he began to address in Tamil, a very eminent member of the House said : "Your Excellency, I propose that the House do adjourn for lunch." That was the kind of thing that happened then. I am supporting the change, but I only want that at least thirty years should be allowed for the transition. There should be no force or compulsion till then. What prevents the Government of India from saying that Hindi shall not be made the official language of the Union for thirty years? This country has been there for thousands of years and what will the country lose if we maintain English for some more years? I am supporting the retention of English in schools and colleges. We should not be behind world knowledge which could be acquired only through a knowledge of English. A certain proportion of the students may be allowed to learn English as a second language. A certain percentage of English-reading student population may go to countries like England and America for higher studies and utilize the knowledge that they derive for the benefit of our country. I am only pleading for tolerance and for allowing some more time for the transition period.

I may remind the hon. Deputy Leader of the Opposition that I have spoken about the need for providing simultaneous translation of the speeches in this House. Translation will enable members to understand the speeches made in languages which they do not understand. In other countries to-day simultaneous translation is adopted. Provision for simultaneous translation in this House was suggested by me, but it was not agreed to. It is only the enthusiasm for Hindi that prevents translation in Tamil. Simultaneous translation will enable us to understand each other better.

29th September 1955] [Raja Muthiah Chettiar of Chettinad]

So let us make a beginning. The equipment may cost about one lakh or two lakhs of rupees. I request the Hon. Leader of the House to order for the necessary equipment.

I am pleading that the Constitution should allow thirty years for the change-over and I would say that the Hindi enthusiasts could achieve their object within that period.

THE HON. SRI C. SUBRAMANIAM : The hon. Member pleaded for more time. Whatever be his plea for the transition period, I would like to have guidance from him as to what should be the ultimate official language of the Union. That was the question put by Sri M. Kalyanasundaram also.

RAJA MUTHIAH CHETTIAR OF CHETTINAD : The question is whether Hindi or some other language should be the official language of the Union Government. To-day the official language of the Union Government is English. The Constitution of India provides for the replacement of English by Hindi within fifteen years. I want that the fifteen years should be changed to thirty years. I do not object to Hindi becoming the official language at the end of thirty years. Twenty years later there may be some new movement led by Mr. Vinayakam or somebody else. I cannot envisage what will happen in the intervening period. So far as I am concerned, I say that thirty years is a fairly reasonable period. Fifteen years is too short and if the enthusiasts of Hindi stick to that period, it will create bitterness among the people. The word 'Dubash' means *Do basha* Duhashes had knowledge in two languages of which one was English. Pachaiyappa Mudaliar was proficient in two languages. It has taken nearly a century for us South Indians to get proficiency in English language. English has been an asset and we are really proud of South Indians for their proficiency in that language. It is only those that have come out of the colleges in recent years that are weak in the language. A Literature M.A. student who has passed the examination, say after 1951, is not able to write an application in correct English language for the post of a Lecturer in a college. India cannot remain isolated from the rest of the world, and English is an asset so far as world politics are concerned. We have attained a great position in the world because we have leaders of the type of Jawaharlal Nehru and we South Indians should not allow that position to deteriorate. If our boys study English, they can get jobs in foreign embassies and fly the flag of India in those countries with great credit.

I am very glad that the Hon. Leader of the House put this direct question. In conclusion I say that I only plead for changing the fifteen years into thirty years. Let the objective be there. Only more time should be given to the people to study various languages and get proficiency in them.

*SRI P. RANGASWAMY REDDIAR : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த ஹிந்தி மொழி பிரச்னையைப்பற்றி கொடுத்திருக்கும் வினாத்தாளில் 34 கேள்விகள் இருக்கின்றன. ஹிந்தி மொழி ஏகாதிபத்யம், தென்னாட்டில் ஏற்பட்டுவிடுமோ என்ற ஐயம் 1937-லிருந்து

[Sri P. Rangaswami Reddiar] [29th September 1955

நமது மாகாணத்தில், குறிப்பாக தமிழ் நாட்டில் இருந்து வருகிறது. அதனால் பலவிதமான **Anti-Hindi agitations** ஹிந்தி எதிர்ப்பு போராட்டங்கள், போராட்டங்கள் காரணமாக உயிர்ச் சேதங்கள், மற்றும் பற்பல விதமான பிரச்னைகளெல்லாம் எழுந்து, ஒருவிதமாக இப்போது அரசாங்கம் இந்த மொழிப் பிரச்னையைப்பற்றி ஒரு முடிவுக்கு வரும் ஏற்பாடு, சூழ் நிலை ஏற்பட்டிருக்கிறது.

முதல் முதலில் காங்கிரஸ் சர்க்கார் இருந்த காலத்தில், அதாவது 1937-ல் ஹிந்தி மொழியை பள்ளிக்கூடங்களில் கட்டாய பாடமாக புகுத்துவதற்கு காரணமாகயிருந்த, அப்பொழுது முதன் மந்திரியாக இருந்த ராஜகோபாலாச்சாரியார் அவர்களே, நான்கு, ஐந்து மாதங்களுக்கு முன்பு தமிழ் வாரப் பத்திரிகையாகிய கல்கியில், மொழிப் பிரச்னைபற்றி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அந்தக் கட்டுரையை பூராவும் படித்துப் பார்ப்போமேயானால், இந்தியாவில் எல்லோரிடையேயும் சகோதரத்துவம், நல்ல அன்னியோன்னிய மனோபாவம் ஏற்படவேண்டுமானால் ஒரு மொழியை பேசுகின்றவர்கள், அந்த மொழியை பேசாதவர்களின் மீது அந்த மொழியை புகுத்தக் கூடாதென்றும், அப்படிப் புகுத்துவதற்கு அல்லது திணிப்பதற்கு முயற்சி செய்தால் நாட்டின் அமைதிக்கும், சகோதரத்துவத்திற்கும் பங்கமேற்படும் என்ற முறையில் கட்டுரை எழுதியிருக்கிறார்கள், கிட்டத்தட்ட 17 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது நாட்டிலிருக்கிற பல பிரச்னைகளில், மொழிப்பிரச்னை ஒன்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் நேற்று ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும்போது, காங்கிரஸ் கூட்டத்திற்கு ஆட்கள் சேருவது போல் மற்ற கட்சிக் கூட்டங்களுக்கு ஆட்கள் சேருவதில்லை என்றார்கள். அவர்கள் மற்ற கட்சி மகாநாடுகளை பார்த்ததில்லை என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

11–30 a.m. அவர்கள் மகாநாடு கூட்டினார்கள், அதிகப்படியான கூட்டம் வந்தது, மற்றவர்கள் மகாநாடு கூட்டுகிறார்கள் கூட்டம் வருவதில்லை என்று கூறுகிறார்கள். நான் சொல்லுகிறேன், திராவிடக் கழக மகாநாடுகள் நடக்கின்றன, கம்யூனிஸ்டுக் கட்சியின் மகாநாடுகள் நடக்கின்றன, அவைகளுக்கு எவ்வளவு கூட்டம் வருகிறது என்பதைப் பார்க்க வேண்டும். எந்த மகாநாடுகள் நடந்தாலும் கனம் மந்திரி அவர்கள் நினைப்பதற்கு மேலாக கூட்டம் வருகிறது என்பதை நான் எடுத்துக் காட்டுகிறேன். இதையே கனம் மந்திரி அவர்களுக்கும் சொல்ல ஆசைப்படுகிறேன். 1936–37-ம் வருஷம் ஹிந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்தபோது கூட்டம் போட்டார்கள். அப்பொழுது அந்தக் கூட்டத்திற்கு இருபதாயிரம், ஏன் ஒன்றரைலட்சம் ஜனங்கள் வரை கூட வந்திருந்தார்கள் என்றும் சொல்லலாம். அதனால் எந்தக் கூட்டம் போட்டாலும் அதற்கு ஜனங்கள் அதிகமாகத்தான் வருவார்கள். ஆனால் எல்லோரும் அந்த மகாநாட்டை ஆதரிப்பவர்கள் என்று சொல்ல முடியாது. கட்சியைச் சேர்ந்தவர்களும் வருவார்கள் சேராதவர்களும் வருவார்கள். அங்கு வந்திருந்த அவ்வளவு பேர்களும் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிவிட முடியாது. அப்பொழுது என்ன நடந்தது ? அங்குள்ள எல்லோரும் ஏகோபித்து கட்டாய ஹிந்தி மொழி தென்னாட்டில் வேண்டாம் என்று தான் ஒற்றுமையாகச் சொன்னார்கள். நம்முடைய மக்களும், நம் மக்களுடைய பிரதிநிதிகளும் எல்லோரும் ஒரே மனதாக ஹிந்தி வேண்டாம் என்றுதான் சொன்னார்கள். அதற்காகத்தான் பெரிய போராட்டத்தை நடத்தினார்கள். அவர்கள் அப்பொழுது என்ன சொன்னார்கள்; அந்தந்த பிராந்தியங்களில் அந்தந்த பிரதேசத்திலுள்ள மொழியின் மூலமாகத்தான் அரசாங்கத்தை நடத்த வேண்டும் என்று சொன்னார்கள். அந்தந்த பிராந்தியத்திலுள்ள மொழியில்தான் நடவடிக்கைகள் நடக்க வேண்டும் என்றும், கோர்ட்டுகளிலும் நடவடிக்கைகள் அந்தந்த பிரதேச மொழியில் தான் நடக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். ஒரு மாகாணத்திற்கும் மற்றொரு மாகாணத்திற்கும் ஏற்படுகிற போக்குவரத்து அல்லது ஒரு மாகாணத்திற்கும் மத்திய அரசாங்கத்திற்கும் ஏற்படக் கூடிய போக்குவரத்து அவ்வளவும் ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் இருக்கலாம் என்றும் அபிப்பிராயம் ஏகோபித்து இருக்க வேண்டுமானால் இவ்வளவு வினாக்கள் அவசியம் இல்லை. இது என்னுடைய தாழ்மையான கருத்து. தமிழ் ராஜ்ய நடவடிக்கைகள் தமிழ் மொழியில் நடத்தப்பட வேண்டும். கல்லூரி

29th September 1955] [Sri P. Rangaswamy Reddiar]

களில் போதனு மொழி தமிழில் நடக்க வேண்டும். சென்னை ராஜ்யத்தில் நடக்கிற சகல விதமான நடவடிக்கைகளும் தமிழிலேயே நடக்கவேண்டும். நம்முடைய ராஜ்யத்திற்கும் மற்ற ராஜ்யத்திற்கும் நடக்கும் கடிதப் போக்கு வரத்து அல்லது மத்திய அரசாங்க போக்கு வரத்து விஷயங்கள் எல்லாம், அந்தந்த அரசாங்கத்தில் நடத்தப்படுகிற மொழியில் அல்லது ஹிந்தியில் இருக்கலாம். நான் தமிழைப்பற்றி சொல்லும்போது அது மலையாளத்திற்கும் கன்னடத்திற்கும் பொருந்தும். இப்பொழுது மொழி அடிப்படையில் மாகாணங்கள் அமைக்கப்பட்டு போகின்றன. அதுவும் சீக்கிரத்தில் உறுதியாகப் போவதாக தெரிய வருகிறது. அப்பொழுது இந்தப் பிரச்னையெல்லாம் தீர்ந்து போய் விடும். சமீபத்தில் சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு பெரியார் ராமசாமி அவர்களுடைய வீட்டில் சிலர் கண்டு பேசினார்கள். "என்ன அடிப்படையில் உங்களுக்கும் அரசாங்கத்திற்கும் பெரிய கருத்து வேறுபாடு இருக்கிறது" என்றும் கேட்டார். அதற்கு பெரியார் சொன்னார்: "பழைய காலத்தில் வெள்ளைக்காரன் வந்த போது அவனுடைய ஏகாதிபத்யம் இருந்த காலத்தில் வெள்ளைக்கார உத்யோகஸ்தர்களை நியமிக்கும்போது எப்படி நியமித்தான். ஆந்திர நாட்டில் வேலை பார்த்தவன் அந்த நாட்டு மொழியை கற்றுக்கொண்டு வரவில்லை. ஆந்திர நாட்டிற்கு வேண்டிய தெலுங்கை கற்றுக்கொண்டு வரவில்லை. தமிழ் நாட்டில் உத்யோகம் பார்க்க வந்த போது தமிழைக் கற்றுக்கொண்டு வரவில்லை. அந்தந்த ராஜ்யங்களுக்கு வந்த பிறகு தான் அந்தந்த ராஜ்யங்களின் மொழியைக் கற்றுக் கொண்டான்" அதே மாதிரி வட இந்தியாவில் போய் உத்யோகம் பார்க்க வேண்டும் என்பவர்கள் அங்கு சென்ற பிறகு அங்குள்ள மொழியைக் கற்றுக்கொள்ளலாம். வட நாட்டில் வியாபாரம் செய்யப் போகிறவர்களும் வியாபார தொடர்பு வைத்துக் கொண்டிருப்பவர்களும் ஹிந்தியைப் படித்துக் கொள்ளட்டும். மற்ற மாகாணத்துடன் போக்குவரத்து வைத்துக் கொண்டிருக்கக் கூடியவர்கள் அந்தந்த பிராந்தியத்திலுள்ள மொழிகளைக் கற்றுக் கொள்ளட்டும். அதனால் நம் பள்ளிகளில் எந்த ஸ்டேஜிலும் ஹிந்தியை கட்டாயமாக்கக் கூடாது. எல்லா ஸ்டேஜிலும் ஹிந்தியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் சொல்வதால்தான் ஹிந்தி ஏகாதிபத்தியம் அமைக்கும் முயற்சி இருக்கிறது என்று சொல்ல வேண்டியதாக இருக்கிறது. இதை கனம் அங்கத்தினர்கள் கருத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்நாட்டில் நடக்கும் சகல விதமான நடவடிக்கைகளும் சட்டசபை நடவடிக்கை, கோர்ட்டு நடவடிக்கைகள் எல்லாம் மற்றும் அரசாங்கத்தில் நடக்கும் எல்லா நடவடிக்கைகளும் நம் நாட்டு மக்கள் சரியாக புரிந்து கொள்ளக் கூடிய மொழியில் நடக்க வேண்டும். நம்முடைய நாட்டு மக்கள் எல்லா நடவடிக்கைகளையும் புரிந்து கொள்ள வேண்டுமென்ற அவா அரசாங்கத்திற்கு இருக்குமானால் அவர்கள் சுலபமாக தெரிந்து கொள்ளக் கூடிய தாய் மொழியாகிய தமிழ் மொழியில் தான் நடத்த வேண்டும். அதைக் கற்றுக் கொடுக்க அதிகப்படியான செலவு தேவை இல்லை, குறைந்த காலத்தில் கற்றுக் கொடுக்கலாம், சுலபமாக கற்றுக் கொடுக்கலாம். ஆகையினால் மாகாண மொழியாகிய தாய் மொழியில் எல்லா நடவடிக்கைகளையும் நடத்துவதற்கும் அதைக் கற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும்.

இதை மனதில் இறுத்தி அதற்குப் பிறகு ஹிந்தியைப் பொறுத்த வரையில், அகில-இந்திய உத்யோகத்திற்கு செல்லுகிறவர்களுக்கு அதை கற்றுக் கொடுக்கலாம். நம் நாட்டிலிருந்து எவ்வளவு பேர்கள் அகில-இந்திய உத்யோகங்களுக்குப் போகப் போகிறார்கள்? எவ்வளவு பேர்கள் அகில-இந்திய பிரயாணம் செய்யப் போகிறார்கள்? அவர்கள் வேண்டுமென்றால் ஹிந்தியைக் கற்றுக்கொள்ளட்டும். அப்படி இல்லாமல் எல்லோரும் ஹிந்தியைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்வது சரியல்ல. அரசாங்க பாஷையாக ஹிந்தியை கட்டாயமாக வைத்து விட்டால் அது எல்லோருக்கும் வேலையைக் கொடுக்கும் என்று நினைத்துக் கொள்ளக்கூடாது. அந்த அடிப்படையில் மொழித் திணிப்பு வேலை செய்யக்கூடாது.

இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கும் 34 கேள்விகளில் 5 கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல்ல வேண்டும் என்று கருதுகிறேன்.

[Sri P. Rangaswamy Reddiar] [29th September 1955

இப்பொழுது 8-வது கேள்வி இருக்கிறது. ஹிந்தி இல்லாத பிரதேசத்தில் அந்த அரசாங்க மொழியுடன் ஹிந்தியும் இருக்க வேண்டியது அவசியமா என்று இருக்கிறது :

"Within a State with non-Hindi-speaking areas-would it, in your opinion, be desirable to encourage the use of Hindi for official purposes in addition to the non-Hindi language?"

என்று இருக்கிறது. இது அனுவசியம். தமிழ் ராஜ்யமாக இருந்தால் தமிழ் அரசியல் மொழியாகவும், பள்ளிகளில் போதனு மொழியாகவும் இருக்கவேண்டும். மலையாளமாக இருந்தால் மலையாளம் போதனு மொழியாக இருக்கவேண்டும். கன்னடமாக இருந்தால் கன்னடம் பிரதேச மொழியாக இருக்கவேண்டும். இன்னொரு மொழி அவசியம் இல்லை என்று தான் பதில் சொல்லவேண்டும். "Is it desirable for official purposes?" என்று கேட்டால் "It is highly undesirable for official purposes" என்று தான் பதில் சொல்லவேண்டும்.

அடுத்தபடியாக 13-வது கேள்வி. கோர்ட்டு விவகாரங்களைப்பற்றிய கேள்வி இது. என்னைப் பொறுத்தவரையில் கோர்ட்டு விவகாரங்கள் ஆங்கிலத்தில் நடந்தாலும் ஒன்று தான் ஹிந்தியில் நடந்தாலும் ஒன்றுதான். தமிழ்மட்டும் படித்தவர்கள் புரிந்துகொள்ள முடியாதபடி சட்டங்கள் எல்லாம் ஆங்கிலத்தில் இருக்கின்றன. எல்லா ரிப்போர்ட்டுகளையும் மற்றவைகளையும் ஹிந்தி மொழியில் மொழி பெயர்ப்பிக்க வேண்டும் என்று யாராவது நினைத்தால் அது பகீரதப் பிரயத்தனம்தான் என்று சொல்லவேண்டும். ஹிந்தியில் மொழி பெயர்ப்பிப்பதைவிட தமிழிலேயே மொழி பெயர்ப்பித்து விடலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகவே சுப்ரீம் கோர்ட்டைப் பொறுத்த வரையில் நான் ஒன்றும் சொல்லவில்லை. நம்முடைய நாட்டில் கோர்ட்டு நடவடிக்கைகள் மற்றும் சட்டசபை நடவடிக்கைகள் எல்லாம் தமிழ் மொழியில்தான் நடக்கவேண்டும். ஆங்கிலம் வேண்டாம் என்றால், ஹிந்தியும் வேண்டாம்.

"When English ceases to be the language of the Supreme Court, should the language of the High Court be the regional language or languages or Hindi."

இதற்கு பதில் என்னவென்றால் ஆங்கிலம் இல்லை என்றால் தமிழ் மொழி தான் கொண்டுவரவேண்டும். கோர்ட்டு நடவடிக்கைகள் மக்கள் புரிந்து கொள்ளவேண்டும் என்றால் தமிழ் மொழிதான் வரவேண்டும். அதற்கு முயற்சி செய்யவேண்டுமே யொழிய ஹிந்தியைக் கொண்டு வந்து அதிலேயே எல்லா நடவடிக்கைகளையும் நடத்தவேண்டும் என்று ஏற்பாடு செய்யக்கூடாது.

அடுத்தபடியாக 19-வது கேள்வி.

"Are you in favour of *requiring* or *encouraging* every student whose mother-tongue is not Hindi to learn Hindi? If so, at what stages?"

இந்த ராஜ்யத்தில் ஹிந்தியை கட்டாயமாக்கக்கூடாது என்பதற்காகத்தான் பல போராட்டங்கள் நடந்திருக்கின்றன. பல போராட்டங்களுக்கு இதுதான் அடிப்படையான காரணம். அதனால் இதைப்பற்றி ஒவ்வொரு மாணவனும் ஹிந்தி படிக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை என்று பதில் சொல்லவேண்டும்.

அடுத்தபடியாக 27-வது கேள்வி. அரசியல் சட்டம் 351-வது பிரிவில் சர்க்கார் கூடியவரையில் ஹிந்தி மொழியை அபிவிருத்தி செய்வதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது அனுவசியமான கேள்வி. அந்தந்த ராஜ்யங்கள்

29th September 1955] [Sri P. Rangaswami Reddiar]

ஞள்ள மொழிகளைத்தான் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும். அதையேதான் மக்களும் அதிகப்படியாக படிக்க ஏற்பாடு செய்யவேண்டும். அதை அபிவிருத்தி செய்து எல்லா மக்களும் படித்தவர்கள் ஆவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமேயொழிய பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் ஹிந்தியை கட்டாய பாடமாக வைக்கக்கூடாது. கட்டாய பாடமாக படிக்கவேண்டும் என்ற அவசியம் ஏற்படக்கூடாது.

அடுத்தபடியாக 30-வது கேள்வி. இது அனுவசியமான கேள்வி. மொழிப்பிரச்னை ஏற்படும்போது இறந்துபோன மொழியைப்பற்றி கொண்டு வரப்படுவது சரியல்ல. சமஸ்கிருதம் தெரிந்துகொண்டவர்கள் அதைப்பற்றி பெருமைகொள்ளலாம். மாகாண மொழிப்பிரச்னையில் இதைக் கொண்டு வாக்கூடாது.

"What steps would you suggest for the encourage of the study of Sanskrit."

சமஸ்கிருதம் கற்றுக்கொள்வதற்கு என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்கப்பட்டு இருக்கிறது. அதற்கு இப்பொழுது எடுத்துக்கொண்டிருக்கக்கூடிய நடவடிக்கை போதுமானது. பெருமைப்படுகிறவர்கள் அதைக் கற்றுக்கொள்ளட்டும். அதை பிரதானமாகக் கருதவேண்டியதில்லை. அதற்கு நடவடிக்கையும் எடுக்கவேண்டிய அவசியம் இல்லை. இந்தக் கேள்விக்கு இடமே இல்லை . . .

ஆனால் இந்தக் கேள்வியிலிருந்து என்ன தெரிகிறதென்று சொன்னால் சமஸ்கிருத எழுத்தைக்கொண்ட ஹிந்தி எழுத்து வற்புறுத்தப்படுமோ, அதாவது தேவநாகிரி எழுத்து வற்புறுத்தப்படுமோ என்கின்ற பீதி எழுகின்றது. இதனால் நாடு பூராவும் பரபரப்பு அதிகப்பட்டு வருகிறது. பொதுவாக நிதி அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி விவாதிக்கவேண்டுமென்று சொன்னபோது, இவ்விஷயத்திற்குப் புறம்பான விஷயங்கள் எதுவும் குறிப்பிடப்படவேண்டியதில்லை என்று கூறினார். அதாவது திராவிடநாடு, அது சம்பந்தப்பட்ட விஷயம் எதுவும் குறிப்பிடப்படவேண்டியதில்லை, அவை அனுவசியமானது என்று குறிப்பிட்டார். 11-40 a.m.

இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு கட்டாய ஹிந்தியை எதிர்க்கும் நோக்கத்துடன் இந்த நாட்டில் திராவிடக் கழகத்தாரால் இந்திய யூனியன் கொடி எரிப்பு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இதை சிலர் தீக்கோழி கொள்கை மாதிரி அதாவது தீக்கோழி தலையை ஒரு பொந்தில் நுழைத்துக்கொண்டுவிட்டால் உலகமே இருண்டுவிட்டது என்று நினைப்பதுபோல் எண்ணிக்கொண்டு இருந்தார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM: அதே நிலைமை அவருக்கும் பொருந்தும் என்று நினைக்கிறேன். அவர்கள் கூறுகிற அபிப்பிராயமும் அப்படியேதான் இருக்கிறது. அதை மனதில் வைத்துக்கொண்டு அவர் பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

*** SRI P. RANGASWAMY REDDIAR**: பூனை கண்ணை மூடினால் பூலோகம் இருண்டு போகும் என்று எண்ணிக்கொள்ளும் என்பார்களே அதைப்போன்றதே இவ்விஷயம். அதாவது ஒரு போராட்டம் ஆரம்பித்தார்கள். அதற்கு முன்பு இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் ரயில்வே நிலையங்களில் எழுதப்பட்டிருந்த ஹிந்தி எழுத்தை அழிக்க ஆரம்பித்தார்கள். அதை அழிப்பதினால் அரசாங்கம் அதைச் செய்யாதவாறு நிர்ப்பந்தப்படுத்த முடியவில்லை. ஹிந்திக்கு இந்த ராஜ்யத்தில் எதிர்ப்பு இருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட வேண்டுமென்றே அதனை ஆரம்பித்தார்கள். அந்த இயக்கத்தை ஆரம்பித்தது ஒரு சிலர் தங்களுடைய சுயநலத்திற்காக ஆரம்பித்ததாக யாராவது நினைத்தால், அரசாங்கமே நினைத்தால் அது தவறு. அரசாங்கத்தார் அதை அலட்சியப்படுத்தக்கூடாது. நாட்டு மக்களுடைய உள்ளக் கருத்தின் எதிரொலிதான் அம்மாதிரி இயக்கங்கள் என்பதை நினைவில் வைத்துக்கொண்டு இந்த மொழிப் பிரச்னையை கவனிக்கவேண்டுமென்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். சுதந்திரம் வந்த பிறகு அந்நிய மொழியாகிய ஆங்கிலம்

[Sri P. Rangaswamy Reddiar] [29th September 1955

இருக்காது. அவரவர்களுடைய பிரதேச மொழியே ஆட்சி மொழியாக இருக்கும் என்று மக்கள் எண்ணிவந்தார்கள். அவ்வாறு எண்ணியது மக்கள் தவறு என்று யாரும் சொல்லமுடியாது. ஹிந்தியைக்கொண்டு வந்து ஆங்கிலத்திற்குப் பதிலாக வைப்பதானால் பலமான எதிர்ப்பு இருக்குமென்று நான் முன்பு சொன்னேன். இவைகள் ஏதோ திராவிடக் கட்சியின் எதிர்ப்பு, அதுவும் ஒரு சிலரால் நடத்தப்படுகின்ற எதிர்ப்பு என்று சொல்லி தட்டிக் கழிப்பதில் பிரயோஜனமில்லை. இந்த நாட்டி லுள்ள எல்லா மக்களின் விருப்பமும் அது தான்.

ஆனால் மத்திய அரசாங்கம் இந்த ஹிந்தி விஷயத்தில் மிகவும் மோசமாக நடந்து வருகிறது. குறிப்பாக ரயில்வே ஸ்டேஷன்களின் போர்டுகளில் முதலிலே ஹிந்தியில் ஸ்டேஷன்களின் பெயர்களை எழுதிவைத்திருக்கிறார்கள். தமிழில் எழுதினாலேயே படிப்பதற்குத் தெரியாத மக்கள் இருக்கக்கூடிய பிரதேசத்தில் ஹிந்தியில் பெயர் போர்டுகளை எழுதுவதிலிருந்தே ஹிந்தியை அவர்கள் ஆதிக்க மொழியாகத் திணிக்கவே விரும்புகிறார்கள் என்பது நன்றாகத் தெரிகிறது. அதனால்தான் இவ்வளவு போராட்டமும் நடந்தது. ஐந்து ரூபாய் கரன்ஸி நோட்டுகளில்கூட ஆறாவது இடத்தில் தமிழ் பொறிக்கப்பட்டிருக்கிறது. இந்திய யூனியனில், இன்று அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்ட 14 மொழிகளையும் தேசிய மொழியாகக் கருதவேண்டுமென்பதே எங்கள் கருத்து. இந்த ராஜ்யத்தின் ஆட்சி மொழிகளாக தமிழ் வரவேண்டும். கல் தோன்றி மண் தோன்றாத காலத்தே கையில் வீரவுடன் தோன்றினான் தமிழன் என்று சொல்கிறார்கள். அவ்வளவு தொன்மை வாய்ந்த தமிழனின் தாய் மொழியாகிய தமிழ் மொழியை மத்திய சர்க்காரின் நிர்வாக மொழியாக இருப்பதற்கு ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் நம்முடைய பிரதேசத்தில் அதற்கு முதன்மையான ஸ்தானம் கொடுக்கப்படவேண்டுமென்பதே எங்கள் கோரிக்கை. இதை நமது அரசாங்கத்தாரும் வலியுறுத்தவேண்டும். வேண்டுமானால் மத்திய சர்க்காரின் சிப்பந்திகளாகிறவர்கள் ஹிந்தி மொழியைக் கற்றுக்கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தலாம். இருந்தாலும் கற்றுக்கொள்வதற்கும் போதுமான அவகாசம் கொடுக்கவேண்டும். அதைத் தவிர கல்லூரிகளிலோ பாடசாலைகளிலோ ஹிந்தியை கட்டாய பாடமாக வைப்பதற்கு ஒருக்காலும் ஒப்புக்கொள்ளக்கூடாது என்று அரசாங்கத்தாரைக்கேட்டுக் கொள்ளுகிறேன். தேச பக்தி என்ற பெயரால் யாராவது ஹிந்தியையே கட்டாயமாக வற்புறுத்தவேண்டுமென்று சொன்னால் அவர்கள் கட்சியில் நான் சேரத் தயாராயில்லை என்று மட்டும் சொல்லி முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

Sri P. B. K. RAJACHIDAMBARAM: கனம் அவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மொழிப் பிரச்னை மிகவும் சிக்கலானதாக இருக்கும்பொழுது, அதுபற்றிய இந்தச் சபையின் கருத்தை என்ன என்று அறிந்து, அதற்குப் பிறகு சபையின் யோசனைக்கு ஒட்டி தங்கள் கருத்தை மத்திய அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டிருக்கும் மொழிக் கமிஷன் முன்பு சமர்ப்பிக்க நமக்கு இந்தச் சந்தர்ப்பம் கொடுத்ததற்காக அரசாங்கத்தாரை, முக்கியமாக நமது சபையின் தலைவராக இருக்கும் நிதி மந்திரி அவர்களையும் நான் பாராட்ட ஆசைப்படுகிறேன். இந்தப் பிரச்னை மிகவும் சிக்கலான பிரச்னை என்பதை இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபிக்கும்போதே அமைச்சர் அவர்கள் வெளியிட்டார். இன்று எந்த மொழி மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமென்பதைப்பற்றி நாட்டில் பலதரப்பட்ட அபிப்பிராய பேதங்கள் பரவி வருகின்றன. ஆனால் நமது அரசியல் சட்டத்தை இயற்றும்போது இந்த சிக்கலான பிரச்னை எழுந்ததாகவும், அப்பொழுது ஏதோ ஒருவாராக அவர்களுக்குள் ஒரு விதமாக முடிவுக்கு வந்ததாகவும் இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபிக்கும்போது அமைச்சர் அவர்கள் சொன்னார்.

ஒரு மொழியானது மக்களுக்கு பலதரப்பட்ட துறைகளிலும் பயன்படக்கூடும். கலையை வளர்ப்பதற்கும், வியாபாரத்தை வளர்ப்பதற்கும் மொழிதான் பலவகையிலும் பயன்படுகிறது. ஆனால் இன்றைக்கு நம் நாடின் முன்புள்ள பிரச்னை ஹிந்தியை தேசிய மொழியாக்கினால் அது எந்தெந்த வகையில் கலையை வளர்ப்பதற்கும், வியாபாரத்தைப் பெருக்கு

29th September 1955] [Sri P. B. K. Rajachidambaram]

வதற்கும், ஆட்சி முறையை நடத்துவதற்கும், நிர்வாகத் துறையில் பல செயல்களையும் புரிவதற்கும் பயன்படும் என்பது தான். ஹிந்தியை தாய்பாஷையாக கொள்ளாத மக்களுக்கு இதனால் எவ்விதப் பிரயோஜனமும் இல்லையென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டும். மேலும் கலையில் சிறந்த மொழி அல்ல ஹிந்தி. வியாபாரத்தைப் பெருக்குவதற்கும் சிறந்த மொழி அல்ல ஹிந்தி. இருந்தாலும் நம் இந்தியாவில் ஹிந்தி பேசும் மக்கள் இதர மொழிக்காரர்களைவிட மிக அதிகமாக இருக்கிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக ஹிந்தியை இந்திய யூனியனின் நிர்வாக மொழியாக ஆக்க விரும்புகிறார்கள். வேறு எந்த காரணத்திற்காகவும் அவ்வாறு செய்வது கிடையாது. இருந்தாலும் நாட்டுக்கு ஒரு அரசியல் மொழி இருக்கவேண்டியது அவசியம் தான். அதைப் பற்றி யாரும் மறுக்கமுடியாது. உலகத்தில் பெருமையாக, திறமையாக இந்த நாடு செயலாற்ற வேண்டுமென்றால் ஒரு மொழி நிர்வாக மொழியாக இருக்கத்தான் வேண்டும். ஆனால் அந்த ஒரே மொழி தான் இந்த நாட்டில் அரசியல் மொழியாக இருக்கவேண்டுமென்கிற அவசியம் இல்லை. இன்று காமன்வெல்த் நாட்டைச் சேர்ந்த கனடாவை எடுத்துக்கொள்வோம். அங்கும் ஆங்கிலமும், பிரெஞ்சும் அரசியல் பாஷையாக விளங்குகிறது. ஸ்விட்ஜர்லாந்தைப்பற்றியும் சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். சுவிஸ் போலவே இதரமொழி பேசும் மக்களுடைய மொழிகளும் அங்கே அரசியல் பாஷையாக இருக்கிறது. என், இலங்கையை எடுத்துக்கொண்டாலும் கூட சிங்களமும், தமிழும் இலங்கையின் அரசியல் பாஷையாக ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்போது இந்திய யூனியனின் அரசியல் மொழியாக ஹிந்தி மாத்திரம் இருக்கவேண்டுமென்று முன்பே அரசியல் சட்டத்தில் என் முடிவு செய்தார்கள் என்பது ஒன்றும் புரியாத மர்மமாக இருக்கிறது. இப்பொழுது அதை ஆராய்ச்சி செய்ய விரும்பவில்லை. 11.50 a.m.

ஒரு அரசியல் மொழி மத்திய அரசாங்கத்திற்கு மட்டுமா ராஜ்ய அரசாங்கங்களுக்கு மட்டும் தேவையில்லையா என்பதை இப்பொழுது நியமிக்கப்பட்டிருக்கும் கமிஷனும் சற்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். இந்திய நாட்டிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் அந்தந்தப் பிரதேச மொழியில் அரசாங்கம் நடத்தப்படுகின்றனவா, நடத்தப்படாவிட்டால் ஏன் நடத்தப்படவில்லை ? முக்கியமாக ஹிந்தி மொழி பேசக்கூடிய உத்தரப் பிரதேசத்தில் இதுவரை ராஜ்ய சர்க்காரின் அலுவல்களெல்லாம் ஹிந்தி மொழியில் நடத்தப்படுகின்றனவா, வங்காள ராஜ்யத்தில் வங்காள மொழியிலும், சென்னை ராஜ்யத்தில் தமிழிலும் சமீபத்தில் ஏற்பட்ட ஆந்திர ராஜ்யத்தில் தெலுங்கிலும் அரசாங்கம் நடக்கிறதா என்று பார்த்தால் அதற்காக மத்திய அரசாங்கமும் சரி, எந்த ராஜ்ய அரசாங்கமும் சரி எவ்வித முயற்சியும் எடுத்துக்கொள்ளவேயில்லை.

பையன் படிப்பதற்கு ஆரம்பப்பள்ளிக்கே அனுப்பாமல் அவன் மேல் படிப்புக்கு எந்தக் கல்லூரியில் படிக்கவேண்டும், அந்தக் கல்லூரியில் எந்தப் பாடங்கள் போதிக்கப்படவேண்டும் என்று ஒரு தந்தை தீவிரமாக யோசனை செய்தால் எவ்வாறு இருக்குமோ, அதைப்போல் ராஜ்ய சர்க்கார்கள் எந்த மொழியில் அரசாங்கம் நடத்தவேண்டுமென்று திட்டமிட்டு அதை அமுலுக்குக் கொண்டுவந்து, அது எவ்வாறு நடத்துகிறது என்று சற்றும் ஆராய்ந்து பார்க்காமல், மத்திய சர்க்கார் அலுவல்கள் எந்த மொழியில் நடத்தப்படவேண்டும், அதைப் பத்து வருஷங்களில் கொண்டு வரலாமா, அதற்கு முன்பே கொண்டுவந்துவிடலாமா என்று தீவிரமாக ஆராய்ச்சி செய்கின்றவர்கள் மொழிவெறியர்களே தவிர, நாட்டு நன்மைக்குப் பாடுபடுகிறவர்கள் என்று சொல்லமுடியாது.

இந்த நிலைமையில் முதலில் நாம் இந்தக் கமிஷனுக்கு சென்னை ராஜ்ய சர்க்காரின் சார்பாக யோசனை சொல்லவேண்டியது எதுவாக இருக்க வேண்டும் என்பதற்கு என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் இது தான் : நமது இந்திய நாட்டிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் அந்தந்த ராஜ்யத்தில் வழங்கப்படும் பிரதேச மொழியில் அரசாங்கம் நடத்தப்பட வேண்டும். 10 ஆண்டுகளோ, 20 ஆண்டுகளோ 30 ஆண்டுகளோ வேண்டுமானால் நடத்திப் பார்க்கட்டும். எந்தப் பிரதேச மொழியில்

[Sri P. B. K. Rajachidambaram] [29th September 1955

அரசாங்கத்தை நடத்துவது சுலபமாக இருக்கிறதோ, அந்த மொழியை இந்தியாவின் அரசியல் மொழியாக ஏற்றுக்கொள்ளலாம். கேவலம் அதிகப்படியானவர்கள் பேசுகிறார்கள் என்ற ஒரு காரணத்திற்காக மட்டும் ஹிந்தி மொழியை இந்தியாவின் அரசியல் மொழியாக இருக்கவேண்டுமென்ற அவசரப்பட்ட முடிவை நாம் இன்று அமல் நடத்தவேண்டாம் (Hear, hear). மெதுவாகச் செய்யலாம் என்பதுதான் தமிழ்நாட்டவர்களுடைய அபிப்பிராயம். ஹிந்தியை வேண்டாமென்று சொல்லவில்லை. அந்தந்த ராஜ்யங்களில் பிரதேச மொழியில் ராஜாங்கத்தை நடத்திப் பார்க்கட்டும். எந்த மொழியில் ராஜாங்கத்தை நடத்துவதற்குச் சுலபமாக இருக்கிறதோ அந்த மொழியை இந்திய நாட்டின் அரசியல் மொழியாக ஏற்றுக்கொள்ளலாமே தவிர, பெரும்பான்மையான மக்கள் ஹிந்தி பாஷையைப் பேசுகிறார்கள் என்பதற்காக அது இந்திய நாட்டின் அரசாங்க மொழியாக இருக்கவேண்டுமென்ற முடிவுக்கு வருவது நல்ல முடிவு அல்ல என்று சபையின் அபிப்பிராயமாக இந்தக் கமிஷனுக்கு நாம் எடுத்துச் சொல்லவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்திய அரசியல் சட்ட அமைப்பிலே, 15 ஆண்டுகளுக்குப் பின்பு ஆங்கிலத்திற்குப் பதிலாக ஹிந்தியை அரசியல் பாஷையாக ஆக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்று நடைபெறுவது என்னவென்று பார்க்கிறோம். தபாலாபீசுக்குச் சென்று money order பாரத்தைப் பூர்த்தி செய்யவேண்டுமென்றால் அதில் ஹிந்தி மொழியில் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. பணம் அனுப்புகிறவர் யார், யாருக்கு அனுப்பப்படுகிறது என்ற விவரங்களெல்லாம் எங்கெங்கே இருக்கின்றன என்பதைப்பற்றிக்கூட நம்மால் அறிய முடியாமலிருக்கிறது. நமது நாட்டிலோ தமிழ் படிப்பு படித்தவர்களே மிகக் குறைவாக இருக்கும்போது நமக்கு ஒன்றும் புரியாத ஹிந்தி மொழியிலே இம்மாதிரி நமூனாக்கள் இருந்தால் என்ன செய்வது? மத்திய சர்க்காரைச் சேர்ந்த தபால் இலாகா, ரயில்வே இலாகா, இன்னும் மற்ற இலாகாக்களிலும் ஹிந்தி மொழியில் அவர்கள் இதைப்போன்ற நமூனாக்களைப் போட்டிருப்பது சட்டத்திற்குப் புறம்பானது. சென்னை ராஜ்யத்திலுள்ள மக்கள் அதை விரும்பவில்லை என்பதையும் அரசாங்கத்தார் அவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும்.

தென்னாட்டில் இருக்கிற ரயில்வே நிலையங்களில் தமிழ், ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பெயர் எழுதப்படுகிறது. ஒவ்வொரு ஊரின் பெயரையும் மூன்று மொழிகளில் எழுதுவதென்றால் எவ்வளவு பணச் செலவாகும்? அதை ஏன் நமது நாட்டில் நிலவிவரும் ஒரே ஒரு மொழியில் மட்டும் எழுதினால் இன்றையச் செலவில் மூன்றில் இரண்டு பகுதிப் பணம் மிச்சம் ஆகாதா என்பதையும் ரயில்வே நிர்வாகத்திற்கு நமது அரசாங்கத்தார் எடுத்துக்காட்டவேண்டும்.

இதற்கிடையிலே சில தீவிரவாதிகள் கல்வியும் ஹிந்தி மூலமாக போதிக்கவேண்டுமென்று பிரசாரம் செய்ய ஆரம்பிக்கிறார்கள். ஹிந்தி மொழியை நான் அதிகம் அறிந்தவன் அல்ல. உண்மைக் கல்வி என்பது அறிவைப் பெருக்குவதற்காகப் பயன்படவேண்டும். ஹிந்தி மொழி மனிதனுடைய அறிவைப் பெருக்கக்கூடிய அளவுக்கு வளர்ந்துவிட்டதா என்பதும் ஹிந்தி மொழியின் மூலமாக கல்வியைப் போதிக்கலாமா என்பதும் மிகவும் சர்ச்சைக்குள்ளான விஷயம். ஏற்கனவே நமது அரசாங்கத்தில் நமது கல்வி அமைச்சர் சொல்லி வருவதுபோல அந்தந்தப் பிரதேச மொழியில்தான் கல்வி கற்பிக்கப்படவேண்டும். அந்தந்த பிரதேச மொழியில்தான் ராஜ்யத்தில் அரசாங்கம் நடக்கவேண்டும். எல்லா ராஜ்யங்களிலும் அந்தந்தப் பிரதேச மொழியில் அரசாங்கம் நடக்க ஆரம்பித்த பிறகு, இன்று நியமிக்கப்பட்டிருப்பது போல் ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டு, அந்தக் கமிஷன் எந்த மொழியில் அரசாங்கம் நடத்துவது சுலபமாக இருக்கிறது, தெளிவாக இருக்கிறது என்பதைத் தெரிந்து அதன் பிறகு நமது நாட்டுக்கு எது அரசியல் மொழியாக இருக்கவேண்டுமென்பதை நிர்ணயிக்கவேண்டும். கேவலம் பெரும்பான்மையோரால் பேசப்படுகிறதென்ற ஒரு காரணத்தை வைத்துக்கொண்டுமட்டும் முடிவு செய்யாமல், மொழியின் தன்மை, மொழியின் வன்மை, மொழியின் பெருமை ஆகிய அம்சங்களைக் கணக்கிலெடுத்துக்கொண்டு ஒரு அரசியல் மொழி வகுத்தால் மிகவும் நன்

29th September 1955] [Sri P. B. K. Rajachidambaram]

முக இருக்கும் என்று இந்த அரசாங்கத்தார் கமிஷனுக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கூறிக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தை அளித்ததற்காக உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

* SRI T. C. NARAYANAN NAMBIAR : மிஸ்டர் டெபுடி ஸ்பீகர், ஸர், இவிடெ நடக்குன்ன ப்ரஸங்ஙளும், தமிழிலும் மலயாளத்திலும் உள்ளது இங்ஸ்ரீகில் தர்ஜ்மாசெய்து ஔத்யோகிக பாஷாகமிஷனு அயச்சுகொடுக்காமென்ன ஬ஹுமானப்பெட்ட ஧னகார்யமந்ரி பறஞ்ஞதில் ஞான் வளரெ ஸந்தோஷிக்குன்னு. அதே அவஸரத்தில் இங்ஙனெ தர்ஜ்மாசெய்ஞ்ஞ ஒரு நில வந்நிரிக்குன்னதெந்னுகொண்டாணென்ன ச்ஞங்ஙிக்காணி க்காரம் ஞான் ஆக்ரஹிக்குன்னு. ஈ ஸபயில்ல அம்ஶங்ஙள் தமிழிலும் மலயாளத்திலும் மாறும் இவிடெ பறயுன்னது இங்ஸ்ரீகிலேக்கு தர்ஜ்மாசெய்ஞ்ஞமெந்னுள்ள ஒரு நில வரத்தி வச்சது இந்நத்தெ ஶவமேண்டாணென்னு அதினெந்ர உத்தரவாதித்வம் நமதிலாக்கி லுமாணென்னு அல்ல ஞான் பறயுன்னது. பாஷயெ ஸம்஬ந்தியுள்ள ஬ுத்திமுட்டுகளும் கழ ப்பங்ஙளுமெல்லாம் வரத்தியெச்சது ஸ்ரீலிங்கிஷுகாரணு. கச்சவடத்தில் ஆரம்பிச்சு ராஷ்ட்ரீயகார்யங்ஙளில் ஶலயிட்ட நாடுவழிகளெ தமிழ்ஶலயிலு அங்கிணியாயி ராஜ்யங்ஙளு ம் ஭ுவிபாகங்ஙளும் கைக்கலாகி இஷ்டம்போலெயும் ஸௌகர்யம்போலெயும் க்ருத்திப்பெத்து ஸம்ஸ்தானங்ஙள் ரூபீகரிச்சதினெந்ர ஫லமாயிட்டாணு ஭ாஷாப்ரஶ்னம் ஸம்஬ந்தியுள்ள கழப்பங்ஙளெல்லாம் ஈ ராஜ்யங்ஙளாயிட்டுள்ளது. இந்நு ஸ்ரீலிங்கிஷுகார் இவிடெயில்ல. நமுக்கு ஸ்வாதந்ர்யம் கிட்டி, நாம் இந்நு ஸ்வாதந்ர்யராண். ஸ்வாதந்ர்யம் கிட்டுன்னதினுமுமு, நாம் நமுடெ ஦ேஶீயப்ரஸ்தாவனம் ஆரம்பிச்ச காலத்து, நாம் எந்னெலும் வா஗்தானங்ஙள் செய்யிட்டுண்டோ, எந்னெலும் ப஦்஧திகளு வரிபாடிக்கலு ஷப்பெட்டுத்தெமென்ந் ப்ரவ்ரூபீசிட்டுண்டோ அந்னெலும் ஸ்வாதந்ர்யம் கிட்டிக்கழிஞ்ஞதினுசேஷம் நிறவே ரேண்டது நமுடெ ப்ரமவும் ப்ரயாணவுமாய ஷுமதலயாணல்லோ. ஬ஹுமானப்பெட்ட மெம்பர் ஶ்ரீ ஜீவாணந்தம் ச்ஞங்ஙிக்காணிச்சபோலெ 1921 ல் இந்ந்ய நாக்ஶனல் கோன்஗்ரஸ்ஸு ஈ ராஜ்யத்து ஭ாஷாஸம்ஸ்தானங்ஙள் ரூபீகரிச்சிட்டுண்டு. அக்காலம் முதல்க்காணு நமுக்கு ஭ாஷாஸம்ஸ்தானங்ஙள் உண்டாயிட்டுள்ளது. கோன்஗்ரஸ்ஸினெந்ர தன்னெ தீரும்மானமநுஸரிச்சாணு தமிழ்ஸம்ஸ்தானவும் கேரளஸம்ஸ்தானவும் கர்ணாடகஸம்ஸ்தானவும் ரூபீகரிக்குன்னது. கோன்஗்ரஸ்ஸினெந்ர ஆ தீரும்மானமநுஸரிச்சு இந்ந்யில் பதினாறு பதினேழு ஸம்ஸ்தானங்ஙள் ரூபீகரிக்கப்பெட்டு. ஭ாஷாஸம்ஸ்தானங்ஙளுடெ பேரில் ஜனங்ஙள் ஆவேஶம்கொண்டு. ஭ாஷா ஸம்ஸ்தானரூபீகரணம் ஸ்வாதந்ர்யஸமரத்தில் ஒரு ஧ர்ம ப்ரஶ்னமாயி உயர்ந்ந வந்ன. அங்ஙனெ 1921 ல்த்தன்ன கோன்஗்ரஸ்ஸு தீரும்மானிச்சுகழிஞ்ஞிட்டுள்ள ஒரு கார்யமாணு ஧ர்ம்மாயு ஭ாஷயெ அடிஸ்஥ானமாயி ஸ்வீகரிச்சுகொண்டு ஸம்ஸ்தான ங்ஙளெ புனர்ஸ்ஸம்஘டிப்பிக்குகயெந்னுள்ளது. 1947 நவெம்ப்ர் 17-ாம் தியதி ப்ரயாண ந்ரி பண்டிரெந்ர் ஜவஹர்லால் நெஹரு கோன்ஸ்ட்டிட்யூவன்ட் அஸெம்ப்ளியில் பற யுகயுண்டாயி : ஭ாஷயெ ஧ர்ம்மாயு அடிஸ்஥ானப்பெடுத்தி ஸம்ஸ்தானங்ஙளெ புனர் விதரணம் செய்யுகயெந்னுள்ளது இந்ந்ய ஶவமேண்டினெந்ர ப்ரவ்ரூபித லக்ஷ்யமாணென்ந். ஆ ப்ரவ்ரூபணத்தினெந்ர அடிஸ்஥ாநத்திலாணு ஭ாஷாஸம்ஸ்஥ாந ரூபீகரணத்தி ந்னுள்ள நடபடிகள் கேந்ரஶவமேண்டுர் எடுத்துகொண்டிரிக்குன்னது. ரண்டோ மூன்னோ தி வஸங்ஙள்க்குள்ளில் ஸம்ஸ்தான புனர்ஸ்ஸம்஘டநாகமிஷனெந்ர ரிப்போர்ட்டு ப்ரஸித்தீகரிக்குந்ந தாணென்னாம் மனஸ்ஸிலாக்கான் கழிஞ்ஞிட்டுண்டு. அங்ஙனெயிரிக்குன்ன ஒரு ஘ட்டத்தி லாணு ஈ ஔத்யோகிக ஭ாஷாப்ரஶ்னம் ஈ ஸபயுடெ ச்ஞ்ச்ஸ்லு வந்நிரிக்குன்னது.

Sanskrit is also mentioned in the Questionnaire. Sir, I am one of those who feel that Sanskrit, which is one of our oldest languages and which is a language which has given rise to all other languages, must also be given a prominent place. It will be just like learning English because nobody is compelled to learn Sanskrit. English is a language which we must try to learn. Sanskrit is also a language which we must learn. There are very valuable books in Sanskrit contributed by Indians to world knowledge. I think, we must also give due encouragement to Sanskrit and there should be no apathy to it. This question of language must not raise unnecessary emotions. On the other hand, we must have a settled policy and as the Hon. Leader of the House has appealed to the House, let us all say that the official language of the Nation should be Hindi, that the language of the State

[Sri K. Venkataswami Naidu] [29th September 1955

must be Tamil and that we must also learn as many languages as possible in the country. It is not very difficult to learn them. Then only there will be unity in the country and we will feel that all of us are together and we are one Nation.

(The Deputy Speaker in the Chair.)

SRI K. P. KUTTIKRISHNAN NAIR : Mr. Deputy Speaker, first of all, I thank you for having given me this opportunity to speak on this important issue. While we come to a decision about the language, our vision is blurred and it is with a certain amount of prejudice that we view all problems affected by that. Religion, caste and language—all these things have got a certain amount of prejudice in the individual and the success of the individual lies in getting over it when we tackle problems like this. The official language, as you know, can only be Hindi so long as India remains as a unit. Nobody disputes that the Indian population is all knit into one brotherhood. Nobody disputes that India has to function as one unit and nobody disputes that our traditions and equipment are directed towards that end. We have to tackle the question of official language on this basis. It is absolutely necessary, if we have to remain as one unit, to have one common language, the official language of the Centre. Sir, it is not possible for us to continue or have English as our official language because you know we have been studying a foreign language which has grown in an atmosphere which is foreign to Indian traditions and our past history. So much so, we have to take up the question, whether we should not adopt a language which is more consistent with our traditions and I have no doubt that Hindi has to be accepted for that purpose if we consider it dispassionately. Sir, the argument has been raised that merely because a large section of the people speak Hindi, we need not accept it. Is it not the democratic principle that when we remain as one unit, we should adopt a more widely spoken language as the official language? Is it not the necessary consequence of accepting the democratic principles?

Sir, it is true that we have to encourage the regional languages. We have to impart education to our children in the regional languages because it will not be possible and it will be a waste of time if we make our children learn a strange language and then impart knowledge through that medium. The medium must be a mother-tongue, a language which they speak at home. That is absolutely necessary but that does not mean that we should shut out the common language, the official language of the country. We have to find means and methods to see that that objective is realised as early as possible. It is absolutely necessary to make our children learn Hindi, English and our regional language from the early classes onwards. It is absolutely necessary that we have to make Hindi a compulsory subject. We have to make English also a compulsory subject because it is an international language and we will be out of the world set up if we do not give prominence to English language. Sir, it will be easy if we enforce from the beginning compulsory study of Hindi and

12-50 p.m.

29th September 1955] [Sri K. P. Kuttikrishnan Nair]

English languages. It is very unfortunate that we are discussing this subject when the States Reorganization is considering the question of the division of States. That situation has given us a clouded vision in respect of the policy we should adopt even in the matter of adopting our official language. I am sure if we dispassionately think over this matter there will be no difficulty. Our regional language or the mother-tongue will be the medium of instruction for our children. English and Hindi will be compulsorily taught as additional languages and if we do so, we will be able to take our place in the Indian Union as one of the wheels which enables us to proceed forward and to progress. Sir, I do not wish to take much of the time of the House. When our country regained freedom, it was cut in two pieces on religious grounds. People in both countries have realised that only through unity we could advance more rapidly and we could be more prosperous. Unless we close up our ranks and forget our differences, unless we realise that these differences on the question of language are inevitable and that we have to overcome all that and that we have to adopt a language which will knit us closely, unless we realize all that and act speedily, we will not be able to maintain solidarity. I request that it should be the opinion of the majority of the people in this House that Hindi must be the official language and that Hindi shall be taught compulsorily from the early classes. I thank you, Sir, for giving me this opportunity to speak.

* Sri M. P. SUBRAMANIAM : கனம் துணைத் தலைவர் அவர்களே, சபைத் தலைவர் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து பேசும்போது ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார்கள். அதாவது வழக்கத்திற்குமாறாக இந்தத் தடவை மொழி கமிஷன் கேள்வித்தாளுக்கு நாங்கள் விடை இன்னமும் தயாரிக்கவில்லை. இந்த சபையின் கருத்துக்களைத் தெரிந்துகொண்டு சபை கொடுக்கிற யோசனைகளுக்கு ஏற்ப நாங்கள் எங்கள் பதில்களைத் தயாரிக்க விரும்புகிறோம் என்று குறிப்பிட்டார்கள். எப்போதும் அவர்கள் ஒரு முடிவை எடுத்த பின்புதான் இந்த சபையின் யோசனையைக்கேட்க வருவது வழக்கம் என்றும், ஆனால் இம்முறை சபையின் யோசனையைக் கேட்டுக் கொண்டபின்புதான் ஒரு முடிவு எடுக்கப்போவதாகக் குறிப்பிட்டார்கள். இதேமாதிரியான முறை இனி எல்லா விஷயங்களுக்கும் நீடிக்க வேண்டுமென்பதே எங்கள் கோரிக்கை. இதுதான் ஜனநாயகத்தின் பண்பாடு. அர்த்தமுடைய செய்கை. அறிவுடைய செய்கை. எந்தப் பிரச்னையாக இருந்தாலும் சபையின் யோசனையைக் கலந்து கொண்டு முடிவு எடுக்கும் முறைதான் சாலச் சிறந்தது. இனிமேல் இதுபோலவே எவ்விஷயத்திலும் நடந்து கொள்ளுவார்கள் என்றும் நம்புகிறேன்.

அடுத்தபடியாக ஹிந்தி மொழியை எந்தெந்த வகையில் உபயோகப் படுத்தலாம் என்பதை விசாரித்து முடிவு செய்வதற்காக அமைக்கப்பட்ட கமிஷனின் முன்பு சபையின் கருத்தைத் தெரிந்துகொண்டு தங்கள் பதில்களைக் கொடுக்கலாம் என நினைத்து சபையின் முன்பு இந்தத் தீர்மானத்தைப் பிரேரித்திருக்கும் நிதி அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். எங்களுடைய கருத்துக்களை எல்லாம் தெரிவிக்க சந்தர்ப்பம் கொடுத்து, இந்தக் கருத்துக்களையும், கமிஷனுக்கு அனுப்பி வைக்கப்போகிறோம் என்று நிதி அமைச்சர் கூறியது மிகவும் வரவேற்கத் தக்கது.

ஹிந்தியைப்பற்றி குறிப்பாக தமிழ் நாட்டிலுள்ளவர்கள் வெகு காலமாக அதை ஆதிக்க மொழியாக ஆக்கிவிடக்கூடாது என்பதாக எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் பேசும்போதும், ஹிந்தி இந்தியாவின் ஒரே ஒரு தேசிய மொழி அல்ல. இருக்கக்கூடிய 14 தேசிய மொழிகளில் இதுவும் ஒன்று எனக் குறிப்பிட்டார்கள். மேலும்

[Sri M. P. Subramaniam] [29th September 1955

திராவிட நாடு பற்றியே, தமிழ் தனி ராஜ்யம் பற்றியோ அவசியம் இல்லாத விஷயங்கள் எதுவும் இதுபற்றிய விவாதத்தில் குறிப்பிடவேண்டிய அவசியம் இல்லையென்றும் சொன்னார்கள். திராவிட நாடு தனித்து இயங்க வேண்டுமென்ற கொள்கையுடைய வாலிபர்கள் நாளுக்கு நாள் லட்சக்கணக்கில் பெருகிக் கொண்டிருக்கிறார்கள் என்பது மறக்கக்கூடாத உண்மை. அதனால் ஹிந்தி மொழியே அவசியம் இல்லையென்று கருதுகிறவர்களும் இருக்கிறார்கள். ஆனாலும்கூட இந்தச் சந்தப்பத்தில் அதன் அடிப்படையில், கருத்துக்களைச் சொல்வதில் பிரயோஜனமில்லை என்பதை ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனால் ஒரே ஒரு விஷயம். பெரிய அறிவாளிகள்கூட, ஸ்ரீ பௌலங்கர் உள்பட சிலபேர்கள் எங்கு சென்றாலும், ஹிந்தியே தேசிய மொழி என்பதாகப் பிரசாரம் செய்து வருகிறார்கள். பாமர மக்களிடையே இந்தத் தவறான கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்கள். இது உண்மைக்குப் புறம்பானதாக இருந்தாலும் எப்படியாவது ஹிந்தியை இந்தியாவின் ஒரே ஒரு தேசிய மொழியாகக் கொண்டு வந்து விடவேண்டுமென்ற எண்ணத்திலிதான் பிரசாரம் செய்து வருவதாக நாங்கள் எண்ண வேண்டியிருக்கிறது. எனென்றால் ஒரு முறைக்குப் பல முறைகளாக நமது நிதி அமைச்சர் அவர்கள் உட்பட பலர் இந்தியாவின் தேசிய மொழிகள் 14-ல் ஹிந்தி ஒரு தேசிய மொழி என்பதாகத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

மத்திய அரசாங்கம் தங்கள் நிர்வாகத்தை நடத்துவதற்கும், ராஜ்ய சர்க்கார்களுடன் கடிதப்போக்குவரத்தை நடத்துவதற்கும் ஹிந்தியை நிர்வாக மொழியாக வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லப்படுகிறது. மத்திய அரசாங்கம், இதர ராஜ்யங்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வதற்கு ஒரு மொழியை வைத்துக் கொள்ளவேண்டுமென்பதை நாங்கள் உணர்கிறோம். இதில் எந்த விதமான மாறுபட்ட கருத்தும் கிடையாது. அதற்காக ஹிந்தியை ராஜ்யங்களின்மீது திணிக்க வேண்டிய அவசியமும் கிடையாது. ஹிந்தி மொழியை மத்திய சர்க்காரின் நிர்வாக மொழியாக ஏற்றுக் கொள்ளும்போதே அந்தந்த ராஜ்யங்களில் வழங்கும் மொழியை அந்தந்த ராஜ்யங்களின் நிர்வாக மொழியாகவும் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். மொழி வழி ராஜ்யங்களை அமைத்து, அந்தந்த ராஜ்யங்களில் அந்தந்த மொழியை நிர்வாக மொழியாக ஆக்குவதில் எவ்விதமான தீங்கும் கிடையாது. எவ்விதமான தீங்கும் ஏற்படாது என்பதை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். சில அங்கத்தினர்கள் ஆங்கிலத்தைப் பற்றியும் பேசினார்கள். ஆங்கிலம் இருக்கக் கூடிய ஸ்தானத்தில் ஹிந்தியை படிப்படியாகக் கொண்டு வரவேண்டுமென்றும் சிலர் குறிப்பிட்டார்கள். இது தவறான போக்கு. ஆங்கிலத்தை நாம் கற்க வேண்டிய மொழிகளில் ஒன்றாக அவசியம் வைத்துக்கொள்ளவேண்டும். சுதந்திரப் போராட்டம் நடத்திய காலத்தில் ஒரு மொழிக்காரர்களை, இங்கே இன்னொரு மொழிக்காரர்கள் உணர்ந்து கொள்ளவும், ஒன்றுபட்ட தேசிய ஐக்கியத்தை திரட்டவும், நமது மாபெரும் தலைவர்கள் எல்லாம், மகாத்மா காந்திஜி உள்பட ஆங்கிலத்தைத்தான் உபயோகப்படுத்தி வந்திருக்கிறார்கள். பல கருத்துக்களை ஆங்கில மொழியிலேயே பேசியும், கட்டுரைகள் எழுதியும் வந்திருக்கிறார்கள். எந்தக் காலத்திலும் ஆங்கிலம் இருக்கவேண்டும் என்பதை பலர் ஆதரிப்பார்கள் என்றே நம்புகிறேன். இதனை பல அரசியல் கட்சிக்காரர்களும் உணர்கிறார்கள் என்றே நம்புகிறேன். விஞ்ஞானத் துறையில் தொழில் துறையில் ஆங்கிலம் வகிக்கும் ஸ்தானத்தை வேறு எந்த மொழியும் அடையவில்லையென்பதை நாம் எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆகவே ஆங்கிலமும் இந்த நாட்டு மக்களுக்குப் போதிக்கப் படவேண்டியது மிக மிக அவசியமாகும். பிற நாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொள்ள அதுவே சிறந்த சாதகமாக இருக்கும். ஆகவே ஆங்கிலத்தை ஒழித்துவிட வேண்டுமென்ற அபிப்பிராயத்தை விட்டு, ஆங்கிலமும் இந்த நாட்டு மக்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்ற கொள்கையும் இருந்தாக வேண்டும். அதனை நாம் புறக்கணித்துவிட முடியாது.

1 p.m. அந்தந்த வட்டாரத்தில் பேசப்படும் மொழி, அதாவது நம்முடைய ராஜ்யத்தில் தாய்மொழியாகிய தமிழ் மொழி, ஆட்சி மொழியாக இருக்க வேண்டும். அந்தந்த் ராஜ்யத்தில் அந்தந்த பிரதேச மொழி எல்லாத்

29th September 1955] [Sri M. P. Subramaniam]

துறைகளிலும் உபயோகப்படுத்தப்படவேண்டும் என்றும் கூறப்படுகிறது. இந்திய யூனியனோடு ராஜ்ய அரசாங்கம் கடிதப் போக்குவரத்து வைப்பதற்கும், ஒரு ராஜ்யத்தோடு மற்றொரு ராஜ்யம் கடிதப் போக்குவரத்து வைப்பதற்கும், இந்தி மொழி அந்த அளவுக்கு இருக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது. வெளிநாட்டு விவகாரங்களில் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டிய அளவுக்கு ஆங்கிலம் இருக்கவேண்டும் என்றும் கூறப்படுகிறது. ஆகவே, பிரதேச மொழி குறிப்பிட்ட பிரதேசத்திலும், இந்தி மொழி மத்திய சர்க்காருடனும், மற்ற ராஜ்யங்களோடும், தொடர்பு வைத்துக் கொள்வதற்கும், ஆங்கில மொழி வெளிநாட்டாரோடு தொடர்பு வைத்துக்கொள்வதற்கும் அவசியம் என்ற முறையில் மூன்று மொழிகளைப் படிக்கவேண்டிய அவசியம் இருக்கிறது.

பொதுவாக, ஒரு மொழியைக் கற்றுக்கொள்ளவேண்டுமென்று நினைக்கும்போது, அந்த மொழி மனிதனுடைய வாழ்வுக்கு அவசியந் தானா, அந்த மொழி இல்லாவிட்டால் வாழ முடியாதா என்று பார்த்து எவ்வளவுக்கெவ்வளவு அதிக மொழிகளைக் கற்காமல் இருக்கமுடியுமோ அவ்வளவுக்கவ்வளவு கற்கவேண்டிய மொழிகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கவேண்டும்.

தமிழ் படித்தவர்கள் 100-க்கு 18 பேர் கூட சென்னை ராஜ்யத்திலே கிடையாது என்று இருக்கும்போது எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் ஆரம்ப காலம் முதற்கொண்டு மூன்று மொழிகள் படிப்பது என்பது நிச்சயமாக முடியாத காரியம். எவ்வளவு குறைந்த அளவுக்கு மொழிகளைக் கற்றுக் கொண்டால் போதுமோ அவைகளை மட்டும் கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தி மொழியையும் தமிழோடு சேர்ந்து கற்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஏனென்றால் மத்திய சர்க்காரில் உத்தியோகத்திற்குப் போகவேண்டும். மத்திய சர்க்காரோடு தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் யாருக்கும் ஏற்படலாம். யாரும் எந்த உத்தியோகத்திற்கும் போகமுடியும் என்ற நிலைமை இருக்கவேண்டும். சாதாரண பாட்டாளி மக்கள், தொழிலாளி, விவசாயி எந்த ஜாதியைச் சேர்ந்தவனாக இருந்தாலும் எல்லோருக்கும் வாய்ப்பு இருக்கின்ற முறையில் தேர்ச்சி பெற்றுக் கொள்ளச் செய்வது மிகவும் அவசியம் என்பதை எல்லோரும் உணருகிறோம். இந்தி மொழியானது மத்திய சர்க்காரோடும், இதர ராஜ்ய சர்க்காரோடும் தொடர்பு வைத்துக்கொள்வதற்கும், ஆங்கில மொழியானது வெளிநாட்டோடு தொடர்பு வைத்துக்கொள்வதற்கும் தெரிந்து இருக்க வேண்டும். விஞ்ஞானத் துறையில் அறிவைப் படிப்படியாக வளர்ப்பதற்கு, விஞ்ஞான ஆராய்ச்சிகளை மேலும் வளர்க்க வேண்டுமென்றால் ஆங்கில மொழியின் மூலந்தான் முடியுமே தவிர இந்தி மொழியின் மூலம் முடியாது. இம்மூன்று மொழிகளும் அவசியம்தானா என்று பார்ப்போம். இந்தியும் ஆங்கிலமும் செய்யக்கூடிய காரியத்தை ஆங்கிலமே செய்துவிடும். ஆங்கிலத்தை மட்டும் வைத்துக்கொண்டால் இன்று இந்தி எந்தத்தேவைக்காக அவசியம் என்று எல்லோராலும் பேசப்படுகிறதோ அந்தத் தேவையையும் ஆங்கிலத்தால் பூர்த்தி செய்துவிடமுடியும் என்பதை சபையிலுள்ளவர்கள் உணரவேண்டும். இரண்டாவதாக 150 ஆண்டுகளுக்குமேல் நம் தேசத்தில் ஆங்கிலம் இருந்தபோதிலும், ஆங்கிலத்தையே தாய்மொழியாகக் கொண்டவர்களோடு நம் நாட்டவர்கள் போட்டி போடமுடியுமா? முடியாது. வெள்ளைக்காரனோடு போட்டி போடக் கூடிய அளவுக்கு ஆங்கிலத்தில் திறமை நம் நாட்டவர்களுக்கு வரவில்லை. ஆங்கிலம் இத்தனை ஆண்டுகள் நம் நாட்டில் இருந்து வந்த போதிலும் ஸ்ரீ ஏ. ராமசாமி முதலியார், ஸ்ரீ ஏ. லட்சுமணசாமி முதலியார், ஸ்ரீ வி. பி. ராமசாமி அய்யர், ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் இவர்களைப் போன்றவர்கள் ஆங்கிலத்தில் தெளிவாகப் பேசக்கூடிய சக்தியுடையவர்களாக இருந்தாலும்கூட ஆங்கிலத்தையே தாய்மொழியாகக் கொண்டிருக்கும் வெள்ளைக்காரருக்கு ஆங்கிலத்தில் இருக்கும் அறிவும் ஆற்றலும் இருக்கக் கூடிய அளவுக்கு சமமாக இருக்கிறார்கள் என்று நாம் சொல்ல முடியாது. பணத்திற்காக, உத்தியோகத்திற்காக ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற அவசியம் இருந்தும் சிலர் கூட வெள்ளைக்காரருக்குச் சமமாக ஆங்கிலத்தில் வரமுடியவில்லை என்ற நிலைமையைப் பார்க்கிறோம்.

[Sri M. P. Subramaniam] [29th September 1955

அதே போல இந்தி மொழியை தாய்மொழியாகக் கொண்டுள்ளவர்களோடு நம் ராஜ்யத்தவர்கள் உத்தியோகத்தில் போட்டி போட முடியாது. எத்தனை ஆண்டுகள்தான் இந்தியில் நம்மவர்கள் பயின்றாலும் இந்தியையே தாய்மொழியாகக் கொண்டுள்ளவர்களோடு நாம் போட்டி போட்டு உத்தியோகத்தில் முன்னேறுவது என்பது முடியாத காரியம். மத்திய சர்க்காருடைய அரசாங்க மொழி என்ற ஒரே காரணத்திற்காக இந்தி மொழியை வலுக் கட்டாயமாக நம் ராஜ்யத்தவர்மீது திணிக்கக்கூடாது.

ஸ்ரீமான் கருத்திருமன் அவர்கள் பேசும்போது, முதல் படிவத்திலிருந்து இந்தி மொழி கட்டாயமாக போதிக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டார். அதனால் மட்டும் இந்தியில், இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களோடு சரியாக நம்மவர்களுக்குப் புலமை வந்துவிட முடியுமா ? ஆங்கிலத்தில் இத்தனை வருஷ காலமாகப் பழகி வந்தும் நல்ல முறையில் ஆங்கிலம் பேசத் தெரியாமல் இருக்கிறோம். போதனா முறையைத் தமிழில் வைத்து, இந்தியை இஷ்ட பாடமாக வைத்து, ஆங்கிலமும் கற்கவேண்டுமென்று வைத்தால் தமிழ் படித்ததோடு இந்தியில் என்ன, பயிற்சி இருக்கமுடியும் அறிவு இருக்கமுடியும் என்று நாம் பார்ப்போமானால் இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டிருக்கக்கூடியவர்களோடு நம்மைப்போன்றவர்கள், இதைக் கட்டாயமாகப் படித்தாலும் அவர்களோடு சரியாக வாரமுடியாது. மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம்தான் இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். 100 ஆண்டுகள் ஆனாலும்கூட அவனோடு சமமாக வருவது இயலாத காரியம்.

ஆங்கிலத்தைப் பொறுத்தவரை 150 ஆண்டுகளுக்குப் பிறகாவது ஏதோ சில குறிப்பிட்டவர்கள் இரண்டு சத விகிதம், மூன்று சத விகிதம் இருந்தாலும் சரி, ஓரளவு தெரிந்துகொள்ளும் அளவுக்காவது (working knowledge) தெரிந்துகொண்டிருக்கிறோம். ஆங்கிலத்திலும் இந்தியிலும் என்ன காரியங்களைச் செய்ய முடியுமோ அந்த இரண்டு மொழியின் மூலம் செய்யக்கூடியதை ஆங்கிலம் ஒன்றினாலேயே பர்த்தி செய்துகொள்ள முடியும். அந்தத் தகுதி ஆங்கில மொழிக்கு இருக்கிறது. ஆனால் இந்தி மொழிக்கு இல்லை. இந்தி மொழி அரசாங்க மொழியாக இருக்கவேண்டியதற்கு அருகதையைப்பற்றி பேசும்போது காங்கரசில் இருக்கக்கூடியவர்கள் கூட புகழ்ந்து கூற இந்தியில் ஒன்றும் இல்லை என சொன்னார்கள். இந்திதான் அரசியல் மொழியாக இருக்கவேண்டுமென்று சொல்லும் ஸ்ரீ பிரகாசா போன்ற அரசியல் தலைவர்கள் உட்பட இந்திக்கு உள்ள ஒரே அருகதை இந்த நாட்டிலுள்ள அதிகப்படியான மக்களால் புரிந்துக் கொள்ளப்படுகிறது என்பதுதான். இந்த ஒரே காரணத்தைத் தவிர வேறு காரணம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்தியையும் சமஸ்கிருதத்தையும் நான் வெறுக்கவில்லை. 5-வது வகுப்பிலிருந்து இந்தியையும் சமஸ்கிருதத்தையும் நான் இரண்டாவது பாடமொழியாகப் படித்திருக்கிறேன். இந்தியின்மீதோ சமஸ்கிருதத்தின் மீதோ எனக்குத் தனிப்பட்ட முறையில் வெறுப்பு கிடையாது. அரசாங்க மொழியாக வருவதற்கு வேண்டிய அருகதை இந்தி மொழிக்கு இருக்கிறதா என்றால், அவர்கள் சொல்லும் ஒரு காரணத்தைத் தவிர, இந்திக்கு வேறு அருகதை கிடையாது. பல மக்களால், பெருவாரியான மக்களால் பேசப்படுகிறது என்ற ஒரே காரணத்திற்காக அதை அரசாங்க மொழியாக ஆக்கவேண்டுமென்ற அவசியம் இருக்கிறதா என்றால் பல நாட்டு வரலாறுகளைத் தெரிந்தவர்கள் அவசியம் இல்லை என்றுதான் சொல்வார்கள். பல நாட்டு வரலாறுகளைப் பார்த்தால், அதிகமான பேர்களால் ஒரு மொழி பேசப்படுகிறதென்ற ஒரே காரணத்தை வைத்துக் கொண்டு அதை அரசாங்க மொழியாக்குவது கூடாது என்ற முடிவுக்கு வருகிறோம்.

ஐரோப்பா கண்டத்திலே ஸ்விட்சர்லாந்து தேசத்திலே மூன்று மொழிகள் ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஜெர்மானிய மொழி, பிரெஞ்சு மொழி, இத்தாலிய மொழி ஆகிய மூன்று மொழிகளும் (Official language) களாக அங்கு ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஜெர்மானிய மொழியை 72 சத விகிதத்தினர் புரிந்துகொண்டு பேசுகிறார்கள். ஆனால், பெரும்பான்மையானவர்கள் புரிந்துகொண்டு பேசக்கூடிய ஜெர்மானிய மொழியொன்றையே அந்த தேசத்

29th September 1955] [Sri M. P. Subramaniam]

தில் ஆட்சி மொழியாக ஆக்காமல், சொற்பமாகப் பேசக்கூடிய மற்ற இரண்டு மொழிகளையும் ஆட்சி மொழிகளாக அங்கு ஏற்றுக்கொண்டிருக் கிறார்களென்றால், அதுவல்லவோ ஜனநாயகப் பண்பு? அதுவல்லவோ சிறுபான்மையோருக்குக் காட்டக்கூடிய சலுகை? மற்ற மொழிகளைவிட ஒரு குறிப்பிட்ட மொழியைத்தான் அதிகமானவர்கள் புரிந்துகொள்கிறார் கள் என்ற ஒரே காரணத்தில் இந்தியைப் புகுத்துவது என்பது மிகவும் தவறான காரியம் என்பதை அரசாங்கமும் சர்க்கார் கட்சித் தலைவரும் நன்றாக உணர்ந்துகொள்ளவேண்டும்.

இந்தியாவிலுள்ளவர்கள் ஒற்றுமைப்படுவதற்கு பெரும்பான்மையோ ரால் பேசப்படும் இந்தி மொழி ஒன்றினால்தான் முடியும் என்று தவறாக நினைப்பது கூடாது. ஒற்றுமை இருக்கவேண்டுமென்று பேசும்போது மொழியை மட்டும் வைத்துக்கொண்டு பேசுவது கூடாது. நாட்டின் பண் பாடு, நாட்டின் வரலாறு, நாட்டின் பழக்கவழக்கங்கள், ஆக ஒட்டுமொத்த மாக இருக்கக்கூடிய எல்லாவற்றையும் கணக்கிலெடுத்துக்கொள்ள வேண்டும். மொழியின் அடிப்படையில் மக்கள் தனித்தனியாக வாழவேண்டு மென்று நினைக்கிறார்கள். பொது மொழி ஒன்றில்தான் ஒற்றுமை ஏற் படும், பல மொழிகள் இருந்தால் இந்தியாவினுடைய ஒற்றுமை சிதறி விடும் என்று நினைப்பவர்கள் உலக வரலாற்றைக் கவனத்தில் வைத்துக் கொள்ளவில்லை, அல்லது நன்றாகப் படிக்கவில்லை என்றுதான் தெரி கிறது. இந்தியா மீண்டும் பிரிந்து சின்னாபின்னப்பட்டு விடும் என்ற எண்ணத்தைக்கொண்டு, பயத்தைக்கொண்டு சிலர் இந்தியை வற்புறுத்து கிறார்கள். இந்தி மொழி ஒன்றினால் இந்தியாவை ஒற்றுமைப்படுத்த முடியும், பலமொழி பேசுபவர்களைப் பிணைத்துவிடமுடியும் என்று மனப் பால் குடிக்கக்கூடாது. இந்தியாவை ஐக்கியப்படுத்துவதற்கு மொழியால் முடியுமா? இந்தியா ஒன்றாகவே இருக்கட்டும்—திராவிட நாடு, வங்காள நாடு, குஜராத்தி நாடு, மராத்தி நாடு என்றெல்லாம் பிரிக்கப்படவேண்டு மென்ற பிரச்னைகள் ஒருபுறமிருக்கட்டும். அதைப்பற்றி இப்பொழுது கவலையில்லை. இந்தியா ஒன்றாகவே இருக்கவேண்டுமானாலுங்கூட, இந்தி மொழியை எல்லா மக்களிடமும் திணிப்பது வழி அல்ல, என்பதை நாம் உணர வேண்டும்.

கனம் அங்கத்தினர் திரு. டி. ஸி. நாராயணன் நம்பியார் பேசும் போது, ஐக்கிய கேரளம், தமிழகம் என்று ஏற்படவேண்டுமென்றும் சென்னை ராஜ்யம் (composite) தன்மையில் இருக்கமுடியாது என்று சொன்னார்கள். சமீபத்தில் ஆந்திர நாடு பிரிந்தது. ஆந்திரர்கள் சென்னை ராஜ்யத்தில் சேர்ந்திருந்தபோது என்ன நினைத்தார்கள்? தமிழ் நாட்டவர்கள் ஆந்திரர்களைச் சுரண்டுகிறார்கள் என்ற தவறான அபிப்பிரா யம் அவர்களிடையே அப்பொழுது இருந்துவந்தது. அதை வைத்துக் கொண்டு அவர்கள் தனியாகப் போய்விட்டார்கள். நமக்கும் அவர்களுக்கும் இப்பொழுது பழைய வேற்றுமைகள் மறைந்து உண்மையாகவே நேசப் பான்மை இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இன்று இருக்கிறது. ஆகவே, ஒரே மொழியை ஆட்சி மொழியாக பலருக்கு வைத்துக்கொண்டிருப்ப தால்மட்டும் ஒற்றுமை ஏற்படவிடமுடியாது. ஆங்கிலம் இருந்தால்தான் ஒற்றுமை இருந்தது என்று நினைப்பதற்கில்லை. அதைப்போலவே இந் தியையும் எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. ஆங் கிலத்தை வேண்டாமென்று சொன்னாலுங்கூட, ராஜாங்க அலுவல்கள் விஷயத்தில் இன்னும் சில வருஷங்களுக்கு ஆங்கிலத்தை வைத்துக் கொள்வதில் தவறு ஒன்றும் இல்லை. ஸ்விட்ஸர்லந்தில் மூன்று மொழி கள் ஆட்சி மொழிகளாக இருக்கும்போது கனடா தேசத்தில் இரண்டு, மூன்று மொழிகள் ஆட்சி மொழிகளாக இருக்கும்போது, இலங்கையில் தமிழும் சிங்களமும் ஆட்சி மொழிகளாக இருக்கும்போது, கிழக்குப் பாகிஸ்தானத்தில் வங்காளமும் உருதுவும் ஆட்சி மொழிகளாக இருக்க வேண்டுமென்று கிளர்ச்சி நடந்துகொண்டு ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் போது, 36 கோடி மக்கள் வசிக்கும் இந்திய உப கண்டத்தில் நான்கு அல்லது ஐந்து மொழிகளை மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழிகளாக வைத்துவிட்டால் என்ன கஷ்டம் வந்துவிட போகிறது என்பதை என்னால் புரிந்துகொள்ளமுடியவில்லை. ஐக்கிய நாட்டுச் சபையில் பல மொழி பேசக்கூடிய பல தேசங்களிலிருந்து பிரதிநிதிகள் கூடியிருந்து கருத்

[Sri M. P. Subramaniam] [29th September 1955

துக்களைத் தெரிவிக்க முடியவில்லையா ? விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக ஒரே சமயத்தில் பல மொழிகளில் மொழி பெயர்க்கக்கூடிய அளவு விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது. ஆகவே, மிகச் சொற்ப செலவிலேயே அதாவது சில லட்சக்கணக்கான ரூபாய் செலவிலேயே இம்மாதிரி செய்து கொள்ளலாம். தனிப்பட்டவர்கள் ஆங்கிலத்திலேயோ, இந்தியிலோ, வங்காளத்திலேயோ, தமிழிலோ இன்னும் மற்ற இந்திய மொழிகளிலோ தங்களுடைய அனுபவம் வாய்ந்த கருத்துக்களையும், நாட்டின் முன்னேற்றத்திற்கான கருத்துக்களையும் எடுத்துச் சொல்வதற்கு முடியும். அவர்களுடைய அறிவையெல்லாம் மத்திய அரசாங்கம் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளலாம். சென்னை ராஜ்யத்தைப் பொருத்தவரையில் இந்தி மொழிக்கு என்ன அவசியம் தேவைப்படப்போகிறது ? கிராமப் புறத்தில் இருக்கக்கூடிய விவசாயி முதல், முதல் மந்திரி கனம் திரு. காமராஜ் அவர்களுடைய பதவி வரையில் தமிழ் மொழியே இருந்தால் போதுமானது, அதற்கு ஆங்கிலமும் தேவை இல்லை, இந்தியும் தேவை இல்லை. ஆகவே, இந்தி பள்ளிக்கூடங்களிலே கட்டாயப் பாடமாகப் புகுத்தப்படவேண்டும் என்று ஒரு நண்பர் மிகத் தீவிரமாகப் பேசினார்கள். தமிழைப்பற்றி நான் சொல்லும்போது, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளும் பிரதேச மொழிகள் என்ற அளவுக்குத்தான் பேசுகிறேன். மலையாளம், கன்னடம் போன்ற மொழிகளும் தமிழிலிருந்தே பிறந்தன என்பதை அவர்கள் இப்பொழுது ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், சமஸ்கிருதத்திலிருந்து இந்தி பிறந்தது என்பதையும் சமஸ்கிருதத்திலிருந்து தெலுங்கு, மலையாளம் பல வார்த்தைகளை எடுத்துக்கொண்டன என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆனால் சமஸ்கிருதத்திலிருந்து வார்த்தைகளை அதிகப்படியாக சேர்த்துக் கொள்ளாத மொழி தமிழ் மொழியாம். அப்படியிருக்க சமஸ்கிருதத்திலிருந்து பிறந்த இந்தி மொழியைக் கற்றுக்கொள்ளவதில் தமிழர்களுக்கு எத்துணைக் கஷ்டம் எத்துணைத் தொல்லை இருக்கும் என்பதை இந்த அங்கத்தினர் அறியாதவர் போலும். இந்தி மொழியானது எந்த விதக் காரணத்தைக்கொண்டும் நிச்சயமாக வரக்கூடாது என்று நாங்கள் கூறுகிறோம். உத்தியோகத்திற்காகனாலும் சரி, பள்ளிக்கூடத்தில் படிக்க வேண்டிய மொழியாக இருந்தாலும் சரி, அது தேவை இல்லை. அதற்குள்ள அருகதை இந்தி மொழிக்கு இல்லை. இந்த சென்னை ராஜ்யத்தில் தமிழர்கள் மட்டும் இந்தி திணிக்கப்படுவதை எதிர்க்கிறார்கள் என்பதல்ல. வங்காளிகளும் எதிர்க்கிறார்கள், பஞ்சாபியர்களும் எதிர்க்கிறார்கள், தாய் மொழியின் மீது பற்றுக்கொண்ட எல்லா மொழியினர்களும் அதை எதிர்க்கிறார்கள். தென்னாட்டிலே உள்ள அத்தனை பேரும் இந்தி அவசியம் இல்லை என்று கருதுகிறார்கள், தேவையில்லை என்று கருதுகிறார்கள். வேறு பல நாடுகளிலே பொது மொழி இல்லாமல் ஒற்றுமையாக இருக்கவில்லையா ?

1-10 p.m. ஆகவே, கடைசியாக என்னுடைய அபிப்பிராயம் இது தான். இந்தக் கேள்வித்தாளுக்கு இந்த சட்ட சபையில் பதில் கொடுக்கும் போது, ஒவ்வொரு உறுப்பினரும் தன்னுடைய மனப்பான்மையை மட்டும் தெரிவித்துவிட்டால் போதாது. நாட்டிலுள்ள மக்களின் பிரதி நிதிகளாக நாமிருக்கிறோம் என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். சாதாரணமாக, ஒவ்வொரு பிரதி நிதியும் தன்னுடைய அபிப்பிராயத்தை மனதில் வைத்துக்கொள்ள வேண்டியது அவசியமே. ஆனாலும் நாட்டு மக்களுடைய எண்ணமும் இங்கு பிரதிபலிக்க வேண்டும். ஹிந்தி எந்த விதத்திலும் இங்கே புகுத்தப்படக்கூடாது. இங்கு சொல்வதைப் பார்த்தால், சட்ட சபையில் ஹிந்தி இருக்கலாமா என்ற கேள்வி இருக்கிறது. வேறு எந்தத் துறையில் ஹிந்தியைப் புகுத்தலாமாவென்ற கேள்வியிருக்கிறது. கோர்ட்டுகளில் புகுத்தலாமாவென்ற கேள்வியிருக்கிறது. கோர்ட்டில் புகுத்துவதாகயிருந்தால், கோர்ட்டுக்குப் போகக்கூடிய வக்கீல் ஹிந்தி படித்திருக்க வேண்டும். அந்த வக்கீலிடம் செல்லும் கட்சிக்காரனும் ஹிந்தி படித்திருக்க வேண்டும். ஆகவே, படிப்படியாக எல்லோரும் ஹிந்தி படிக்கவேண்டியிருக்கும்.

29th September 1955]

THE HON. SRI C. SUBRAMANIAM : ഇന്ത്യക്കേൾവിത്താൾ ഹിന്ദി പേശക്കൂടിയ പ്രദേശത്തുക്കും ചേർത്തുത് തയാരിക്കപ്പട്ടിരുക്കിറതു. ആതലാൽ, ഇന്ത്യക്കേൾവി കേട്കപ്പട്ടിരുക്കിറതു. അതിലിരുന്തു പുതിതാക അർത്തം എടുത്തുക്കൊള്ള വേണ്ടിയതില്ലേ. ഇതു തമിഴ് നാട്ടുക്കു മട്ടും ഏറ്റപട്ട കേൾവിത്താൾ അല്ല.

SRI M. P. SUBRAMANIAM : കനം മന്ത്രിരി അവർകൾ സൊല്വതൈ നാൻ ഒപ്പുക്കൊള്കിറേൻ. ആനാൽ, അന്തക് കമിട്ടിയിലുള്ള ഉറുപ്പിനർകളിൻ മനപ്പാൻമൈ എപ്പടിയിരുക്കിറതു എൻപതൈത് താൻ നാൻ എടുത്തുക്കാട്ടുകിറേൻ. ഹിന്ദി മത്തിയ അരചാങ്കത്തിൻ അരചിയൽ മൊഴിയാകവും, രാജ്യങ്കളുടൻ തൊടർപുക്കാകവുള്ള മൊഴിയാകവും ഇരുക്ക വേണ്ടുമെൻപതു കമിഷനുടൈയ കുറിക്കോളാകയിരുന്താൽ, ഇന്തക് കേൾവികൾ അവശിയമില്ലേ. കനം അങ്കത്തിനർ രാജാ മുത്തൈയാ ചെട്ടിയാർ സൊന്ന മാതിരി, അരചിയൽ ചട്ടത്തിൽ കുറിപ്പിട്ടിരുക്കുംപടി ഹിന്ദി അരചിയൽ മൊഴിയാക മട്ടും ഇരുക്കും എൻപതൈ ഒപ്പുക്കൊണ്ടാൽ, പോസ്ടു കാർഡുകളിലും റെയിൽവേ സ്ടേഷൻ പോർടുകളിലും ഹിന്ദിയൈ ഏൻ പുകുത്ത വേണ്ടും. തപാൽ കാർഡിൽ തമിഴ് മൊഴിക്കു ഇടമില്ലേയേ ? Inland letter-ഇൽ **മേജൻ വാല** എൻറെല്ലാം ഹിന്ദിയൈപ് പുകുത്ത അവശിയമില്ലേ. ഇതെല്ലാം എതൈക് കുറിക്കിറതു ? സൊല്ലാമലേയേ, ഹിന്ദിയൈപ് പുകുത്തപ് പാർക്കിറാർകൾ എൻപതൈത് താൻ കുറിക്കിറതു. "Official language" എൻറു കൂട സമ്പിധ കാലത്തിലിരുന്തു താൻ പേചപ്പടുകിറതു. അരചിയൽ ചട്ടത്തൈപ് പടിക്കാത കാരണത്താൽ, എല്ലോരും ഹിന്ദി തേചിയ മൊഴിയെൻറു പേചിക്കൊണ്ടു വരുകിറാർകൾ. ആകവേ താൻ അവർകളുടൈയ എണ്ണമാകവു ഹിന്ദിയൈപ് പുകുത്ത വേണ്ടുമെൻപതു താൻ. വെള്ളൈക്കാരൻ എപ്പടി നീചത്തനമാന എണ്ണത്തുടൻ തന്നുടൈയ മൊഴിയൈപ് പുകുത്ത വിരുമ്പിനാനോ അതേ മാതിരിയാന നിചത്തനമാന എണ്ണത്തുടൻ വട നാട്ടാർ ഹിന്ദിയൈപ് പുകുത്തി നമ്മൈ അടക്കി ആളവേണ്ടുമെൻറു കനവു കാണ്കിറാർകൾ. അതു മുടിയാത കാരിയം. ഹിന്ദിയൈ എന്ത വിതത്തിലും പുകുത്തക് കൂടാതെൻറു ഇന്ത സട്ടചപൈ വറ്റുറുത്ത വേണ്ടും. അരചാങ്കമ് ഇതുക്കു ചെവി ചായ്ക്ക വേണ്ടും. ഇതു അവർകളുടൈയ അപിപ്രായമല്ല, നാട്ടിലുള്ളവർകളുടൈയ അപിപ്രായത്തൈ ചിപാരിചു ചെയ്യ വേണ്ടുമെൻറു കേട്ടുക്കൊണ്ടു എൻനുടൈയ പേച്ചൈ മുടിത്തുക്കൊള്കിറേൻ.

*** SRI M. NARAYANAN NAMBIAR :** മിസ്റ്റർ ഡെപ്യൂട്ടി സ്പീക്കർ, സർ, ഹിന്ദിയൈ സംബന്ധിച്ചുള്ള ഈ വാദപ്രതിവാദത്തിൽ പങ്കെടുക്കാൻ അവസരം തന്നതിന്നു ഞാൻ ആദ്യമായി അങ്ങേക്കു് നന്ദിപറഞ്ഞുകൊള്ളുന്നു. ഹിന്ദി നമ്മുടെ ദേശീയപ്രസ്ഥാനത്തിൽ അതിപ്രധാനമായ ഒരു പങ്ക് വഹിച്ചിട്ടുണ്ടെന്നു പ്രത്യേകം പറയേണ്ടതില്ലല്ലോ. സ്വാതന്ത്ര്യസമരകാലത്തു ആ സമരത്തിന്നു ശക്തിയും ആവേശവും നൽകുവാൻ ഹിന്ദി എത്രമാത്രം ഉപകരിച്ചിട്ടുണ്ടെന്നു് സ്വാതന്ത്ര്യസമരചരിത്രം പഠിച്ചിട്ടുള്ള ഏവർക്കും ബോദ്ധ്യമായിരിക്കണം. ഇന്ത്യയുടെ രാജ്യോഗിക ഭാഷ ഇംഗ്ലീഷ് ആണെങ്കിലും ഇന്ത്യയിലെ ജനങ്ങളിൽ ഇംഗ്ലീഷ് അറിയുന്നവരുടെ ശതമാനം തുച്ഛമായതുകൊണ്ടു് കന്യാകുമാരി മുതൽ ഹിമാലയം വരെയുള്ള വിവിധ ഭാഷകൾ സംസാരിക്കുന്നവരായ ഇന്ത്യൻജനതക്ക് ഒരു പൊതുഭാഷ ആവശ്യമാണെന്നുള്ളതുകൊണ്ടും രാഷ്ട്രപിതാവായ മഹാത്മാഗാന്ധി ഇന്ത്യയുടെ പൊതുവ്യവഹാരഭാഷ *lingua franca* യായി ഹിന്ദിയെ അംഗീകരിക്കണമെന്നു അഭിപ്രായപ്പെട്ടു. ഹിന്ദിക്കു ദക്ഷിണേന്ത്യയിൽ പ്രചാരം കുറവായതുകൊണ്ടു് അതിന്റെ പരിഹാരത്തിന്നായി 1918 ലാണെന്നു തോന്നുന്നു ശ്രീ ദേവദാസ് ഗാന്ധി ദക്ഷിണേന്ത്യയിൽ വരികയും അതിനെത്തുടർന്നു ദക്ഷിണഭാരത ഹിന്ദിപ്രചാര സഭ സ്ഥാപിക്കുകയും ചെയ്തു. അക്കാലംമുതൽ ദക്ഷിണേന്ത്യയിലും ഹിന്ദി പ്രചരിക്കാൻ തുടങ്ങി. സ്വാതന്ത്ര്യസമരകാലത്തു ഹിന്ദിപ്രചാരണം ഇന്ത്യൻ നേഷനൽ കോൺഗ്രസ്സിന്റെ നിർമ്മാണ പരിപാടികളിൽ മുഖ്യമായ ഒരിനമായിരുന്നു. എന്നാൽ സ്വാതന്ത്ര്യപ്രാപ്തിയോടുകൂടി ഹിന്ദി പ്രചരണത്തിനുവേണ്ടിയുള്ള പ്രവർത്തനങ്ങളുടെ ഉത്തേജനം കുറഞ്ഞുവെന്നു പറയേണ്ടിയിരിക്കുന്നു. അങ്ങിനെ ഇന്ത്യയുടെ ഔദ്യോഗികഭാഷയായി ഹിന്ദിയെ അംഗീകരിക്കണമെന്ന എന്ന സംശയത്തിലെത്തിയിരിക്കയാണ്. ഇന്ത്യയുടെ ഔദ്യോഗിക ഭാഷ ഹിന്ദിതന്നെയായിരിക്കണമെന്ന അഭിപ്രായത്തോടു ഞാൻ പൂർണ്ണമായും യോജിക്കുന്നു. പതിനഞ്ചു് കൊല്ലം കഴിയുമ്പോൾ

[Sri M. Narayanan Nambiar] [29th September 1955

ഇംഗ്ലീഷിന്റെ സ്ഥാനത്തു ഹിന്ദിയെ എത്തിക്കണമെന്നു ഭരണഘടന പറയുമ്പോൾ ഹിന്ദിപ്രചരണം ഇന്നത്തെ നിലയിൽ തുടർന്നാൽ അതു് സാധിക്കുമൊ എന്നു പരിശോധിക്കേണ്ടതായിട്ടുണ്ട്. ഭരണഘടന പാസ്സാക്കിയിട്ടു അഞ്ചു കൊല്ലം കഴിഞ്ഞു. ഈ അഞ്ചു കൊല്ലക്കാലത്തിനുള്ളിൽ മദ്രാസ് സംസ്ഥാനത്തിൽ ഹിന്ദിപ്രചരണത്തിനായി ഗവമേണ്ടു കാര്യക്കമമായി എന്തെങ്കിലും ചെയ്തിട്ടുണ്ടോ എന്നു ചോദിച്ചാൽ ഇല്ലെന്നു പറവാൻ നിവൃത്തിയുള്ളു. ഹിന്ദിപ്രചരണത്തിനായി മദ്രാസ് ഗവമേണ്ടു പറയത്തക്ക യാതൊരു ശ്രമവും ചെയ്തില്ലെന്നു പറഞ്ഞാൽ പരമാർത്ഥംമാത്രമാണ്. ഹിന്ദിയെ എന്തിന് ഇന്ത്യയുടെ ഔദ്യോഗിക ഭാഷയാക്കണമെന്നാണ് ചോദ്യമെങ്കിൽ കൂടുതൽ ജനങ്ങൾ സംസാരിക്കുന്ന ഭാഷ ഹിന്ദിയായതുകൊണ്ടെന്നു സമാധാനം. ഇന്ത്യയിലെ ജനങ്ങൾ 32 കോടിയോളം ആളുകൾക്കു ഹിന്ദി വശമുണ്ടെങ്കിൽ മററുള്ളവർക്കും ഹിന്ദി പഠിക്കാൻ വിഷമമുണ്ടാകേണ്ടതില്ല. ദക്ഷിണേന്ത്യയിൽ ദക്ഷിണഭാരത ഹിന്ദിപ്രചാരസഭയുടെ പ്രവർത്തനഫലമായി ഹിന്ദിക്കു വളരെ പ്രചാരം ലഭിച്ചിട്ടുണ്ട്. തെക്കെ ഇന്ത്യയിൽ ഇന്നു ഹിന്ദിക്കെതിരായി നില്ക്കുന്നതു് മദ്രാസ് ഗവമേണ്ടും തമിഴ്നാട്ടിലെ ജനങ്ങളും മാത്രമാണ്. ഹിന്ദി ഔദ്യോഗിക ഭാഷയാക്കുന്നതിനു ഭരണഘടനയിൽ നിശ്ചയിച്ചിട്ടുള്ള 15 കൊല്ലത്തെ 30 കൊല്ലമൊ 60 കൊല്ലമൊ ആക്കണമെന്നു വാദങ്ങളും ഉന്നയിച്ചിട്ടുണ്ട്. അഞ്ചു കൊല്ലം കഴിഞ്ഞിട്ടും ഹിന്ദി വേണമോ വേണ്ടയോ എന്നു തീർച്ചപ്പെടുത്തി ഒരു തുടക്കത്തിനുപോലും സാധിച്ചിട്ടില്ലെങ്കിൽ 30 കൊല്ലം കഴിഞ്ഞാലും നാം തുടങ്ങാൻ ആലോചിക്കയല്ലാതെ തുടങ്ങുമോ എന്നു സംശയമാണ്. അതുകൊണ്ടു കാലം നിട്ടുന്നതിനുള്ള വഴിയാലോചിക്കാതെ ഹിന്ദി പ്രചരിപ്പിക്കുന്നതിനുവേണ്ടി അടിയന്തിരമായി എന്തു ചെയ്യണമെന്നു ആലോചിക്കുകയാണ് വേണ്ടതു്. അതാണ് എന്റെ വ്യക്തമായ അഭിപ്രായം.

സംസ്ഥാന നിയമസഭകളിൽ ഏതു ഭാഷയാണുപയോഗിക്കേണ്ടതെന്നുള്ള പ്രശ്നമുണ്ട്. ഭാഷയുടെ അടിസ്ഥാനത്തിലുള്ള സംസ്ഥാനങ്ങളാണ് ഉണ്ടാകാൻ പോകുന്നതെങ്കിൽ അതതു സംസ്ഥാനങ്ങളിലെ പ്രദേശഭാഷതന്നെ കൈകാര്യം ചെയ്യാൻ സാധിക്കും. ഒന്നിലധികം ഭാഷകളുള്ള സംസ്ഥാനങ്ങളിൽ നടപ്പുള്ള എല്ലാ ഭാഷകളും കൈകാര്യം ചെയ്യാനുള്ള സൌകര്യം കിട്ടണം. സംസ്ഥാനങ്ങൾ തമ്മിലും, സംസ്ഥാനങ്ങളും കേന്ദ്ര ഗവമേണ്ടും തമ്മിലുമുള്ള എല്ലാ കത്തിടപാടുകളും ഹിന്ദിയിലായിരിക്കേണ്ടതാണ്.

അങ്ങനെ ഹിന്ദിക്കങ്ങുയിരിക്കേണ്ട സ്ഥാനം നിശ്ചയിച്ചുകഴിഞ്ഞാൽ ഹിന്ദി എത്രയും വേഗത്തിൽ എങ്ങനെ പ്രചരിപ്പിക്കാൻ സാധിക്കും, അതിനുവേണ്ടി എടുക്കേണ്ട നടപടികൾ എന്തെല്ലാം എന്നി കാര്യങ്ങളെപ്പററി ചിന്തിക്കേണ്ടിയിരിക്കുന്നു. മദ്രാസ് ഗവമേണ്ടു പറയുമായിരിക്കും ഇന്നു ഹൈസ്കൂളുകളിലെല്ലാം ഹിന്ദി നടപ്പുണ്ടെന്ന്. ഹൈസ്കൂളുകളിൽ ഹിന്ദിയുണ്ട്. പക്ഷെ, അതൊരു നിർബ്ബന്ധവിഷയമല്ല. എസ്.എസ്.എൽ.സി. പരീക്ഷയിൽ ജയിക്കുന്നതിനു ഹിന്ദിക്കു പാസ്മാർക്കു വാങ്ങിയിരിക്കണമെന്നു നിർബ്ബന്ധമില്ല. ഏതു കാര്യമായാലും അച്ഛം നിർബ്ബന്ധം ചെലുത്തിയില്ലെങ്കിൽ ആരും അതിനെ കാര്യമായെടുക്കുകയില്ല. ഇന്ത്യയുടെ മററു ഭാഗങ്ങളെല്ലാം മുന്നോട്ടുപോകുമ്പോൾ നാം പിന്നിൽ നിന്നാൽ വീണ്ടും വീണ്ടും പിന്നോട്ടു പോകുമെന്നല്ലാതെ നമുക്കു പുരോഗതി പ്രാപിക്കാൻ സാദ്ധ്യമല്ല. തെക്കെ ഇന്ത്യയിലെ ആളുകൾക്കു ഒന്നിലധികം ഭാഷകൾ പഠിക്കാൻ വലിയ പ്രയാസമൊന്നുമില്ല. പോരെങ്കിൽ ഹിന്ദി പഠിക്കാൻ വളരെ എളുപ്പമുള്ള ഒരു ഭാഷയുമാണ്. ഇംഗ്ലീഷ് പത്തു കൊല്ലം പഠിച്ചാലും ശരിയായി ഒരെഴുത്തെഴുതാനുള്ള പരിജ്ഞാനംപോലും നമ്മുടെ കുട്ടികൾക്കു ആ ഭാഷയിൽ സിദ്ധിക്കുന്നില്ല. നേരെമറിച്ചു ഹിന്ദി പഠിക്കാൻ യാതൊരു പ്രയാസവുമില്ല. രണ്ടോ മൂന്നോ കൊല്ലം പഠിച്ചാൽ ഹിന്ദിയിൽ അസാമാന്യമായ പാണ്ഡിത്യം സമ്പാദിക്കാം. പ്രൈമറി സ്കൂളുകളിൽതന്നെ കുട്ടികളെ ഹിന്ദി പഠിപ്പിക്കുന്നതിനു വലിയ പ്രയാസമില്ല. പഠിക്കണമെന്നും പഠിപ്പിക്കണമെന്നും നമുക്കു ഉദ്ദേശമുണ്ടെങ്കിൽ ഈ 15 കൊല്ലക്കാലത്തിനകംതന്നെ ഹിന്ദി എല്ലാവർക്കും വശമാക്കാൻ സാധിക്കും. പ്രൈമറി സ്കൂളുകളിലും ഹിന്ദി ആരംഭിക്കാവുന്നതാണ്. സെക്കണ്ടറി സ്കൂളുകളിൽ ഹിന്ദി നിർബ്ബന്ധിതമാക്കിയേ തീരൂ. ജയിക്കണമെങ്കിൽ ഹിന്ദിയിലും പാസ്മാർക്ക് വാങ്ങണമെന്ന് നിർബ്ബന്ധമുണ്ടാകണം.

യൂണിവേർസിററികളിലെ അദ്ധ്യയനഭാഷ തദ്ദേശീയ ഭാഷ ആയിരിക്കണമെന്നുള്ള നിർബ്ബന്ധമാണ് മദ്രാസ് ഗവമേണ്ടിനുള്ളതെന്നു തോന്നുന്നു. തദ്ദേശീയ ഭാഷകൾക്കു പകരം യൂണിവേർസിററികളിൽ ഹിന്ദി ഉപയോഗിക്കുകയല്ലേ നല്ലതെന്നു ഒന്നുകൂടെ ആലോചിക്കേണ്ടതാണ്. ബോംബെ യൂണിവേർസിററിയിൽ ക്രമേണ ഹിന്ദി അദ്ധ്യയന

29th September 1955] [Sri M. Narayanan Nambiar]

ഭാഷയാക്കണമെന്ന അടുത്ത കാലത്തു ബോമ്പെ യൂനിവേർസിററി നിയമിച്ച കമ്മിററി ശുപാർശചെയ്തിരിക്കുന്നതായും യൂനിവേർസിററി അതു് നടപ്പിൽവരത്താൻ നടപടികൾ എടുത്തുവരുന്നതായും അറിയുന്നു. മററു സംസ്ഥാനങ്ങളിലെ യൂനിവേർസിററികളിലും ഹിന്ദി സ്വീകരിക്കാൻ ദീർഘമാണിക്കുന്നതു് നല്ലതല്ലെന്നു എന്നു ഗവമ്മേണ്ടുകളും യൂനിവേർസിററികളും ആലോചിക്കേണ്ടതാണ്. യൂനിവേർസിററികളിലും അദ്ധ്യാപനഭാഷയായി ഹിന്ദി സ്വീകരിക്കുന്നതു് നന്നായിരിക്കുമെന്നാണ് എന്റെ അഭിപ്രായം.

സർ, ഗവമ്മേണ്ടുദ്യോഗസ്ഥന്മാരോടു ഇപ്പോൾതന്നെ ഒന്നിലധികം ഭാഷ പഠിക്കണമെന്നു നാം ആവശ്യപ്പെടാറുണ്ട്. ഇപ്പോൾ ഉദ്യോഗങ്ങളിലിരിക്കുന്ന ആളുകൾക്കും ഹിന്ദി എളുപ്പത്തിൽ പഠിക്കാവുന്നതാണ്. ജോലിസമയം കഴിഞ്ഞാൽ കഴിയുന്ന സമയം ഹിന്ദി പഠിക്കുന്നതിനായി മാററിവയ്ക്കുകയുണ്ടെങ്കിൽ ഒരു ക്ലിപ്തകാലത്തിനുള്ളിൽ അവർക്കു പ്രയാസംകൂടാതെ ഹിന്ദി പഠിക്കാം.

സർ, ഇന്നു ദക്ഷിണഭാരതം ഹിന്ദിപ്രചാരസഭ ഹിന്ദിയുടെ പ്രചാരത്തിന്നുവേണ്ടി വളരെയൊക്കെ ശ്രമിക്കുന്നുണ്ട്. അതുപോലെ ഹിന്ദിപ്രചരണത്തിൽ താല്പര്യം പ്രദർശിപ്പിക്കുന്നൊരുകൂട്ടമുണ്ടു പല സംഘടനകളും സ്ഥാപനങ്ങളും മുന്നോട്ടുവന്നിട്ടുണ്ട്. അത്തരം സംഘടനകളെ ഗവമ്മേണ്ടു അംഗീകരിക്കുകയും സഹായങ്ങൾ ചെയ്തു പ്രോത്സാഹിപ്പിക്കുകയും ചെയ്താൽ ഇവിടെ വളരെ എളുപ്പത്തിൽ ഹിന്ദി പ്രചരിക്കും. ഹിന്ദിപ്രചാരത്തിന്നു മുന്നോട്ടുവന്ന സംഘടനകളെ ഗവമ്മേണ്ടു ഉദാരമായ സഹായങ്ങൾ ചെയ്തു പ്രോത്സാഹിപ്പിക്കേണ്ടതാണ്. അതുപോലെതന്നെ ഹിന്ദിയിലുള്ള പുസ്തകങ്ങൾ വാരികകളും മാസികകളുമെല്ലാം വായനശാലകളിലും മററു കൂടുതൽ പ്രചരിപ്പിക്കുന്നതിന്നും നടപടികൾ എടുക്കേണ്ടതാണ്.

സർ, പോസ്റ്റുകാർഡുകളിലും മററും ഹിന്ദിയിലെഴുതുന്നതിനെ ഇവിടെ ചിലർ ആക്ഷേപിച്ചുകേട്ടു. ഇങ്ങിനെ നാശരിലിപി കണ്ടുകൂടുന്നതെ ആക്ഷേപിക്കുകയും ആനിക്കുകയുമാണെങ്കിൽ ഈ ആക്ഷേപവും എതിർപ്പും എന്ന് അവസാനിക്കുമെന്നു പറയുന്നു സാദ്ധ്യമല്ല. അതുപോലെ ബോർഡുകളുടെ കാര്യം. റെയിൽവേ സ്റ്റേഷനുകളിലും മററു പൊതുസ്ഥലങ്ങളിലും സാലങ്ങളുടെ പേരുകൾ എഴുതുമ്പോൾ ഹിന്ദിയിൽകൂടെ എഴുതുകയാണെങ്കിൽ ഹിന്ദിയുടെ പ്രചാരത്തെ അതു് ഒരുവിധത്തിൽ സഹായിക്കുമെന്നുള്ളതിന്നു സംശയമില്ല.

സർ, നാം ഏകീകൃതമായ ഒരു ഇന്ത്യകുവേണ്ടിയാണല്ലൊ നിലകൊള്ളുന്നതു്. വിഭിന്നഭാഷകൾ സംസാരിക്കുന്ന ആളുകൾ നമ്മുടെ രാജ്യത്തുണ്ട്. പതിനാലു ഭാഷകൾ ഭരണഘടനതന്നെ അംഗീകരിച്ചിട്ടുണ്ട്. ഈ പതിനാലു ഭാഷകൾ സംസാരിക്കുന്ന പ്രദേശക്കാർ തന്താങ്ങളുടെ ഭാഷ മാത്രമേ പഠിക്കൂ, ഒരു പൊതുഭാഷ പഠിക്കാൻ തയ്യാറില്ല എന്ന വന്നാൽ വിവിധ സ്റ്റേറ്റുകൾക്കു പൊതുവായുള്ള കാര്യങ്ങളെക്കുറിച്ചു ചർച്ചചെയ്യാനും പരസ്പരം ആശയവിനിമയം ചെയ്യാനും സാദ്ധ്യമല്ലാതെ വരും. അതു നമ്മുടെ ഐക്യഭാരതത്തെ എങ്ങനെ ബാധിക്കുമെന്നുകൂടി നാം ആലോചിക്കേണ്ടതാണ്. കന്യാകുമാരി മുതൽ ഹിമാലയം വരെയുള്ള വിവിധ ഭാഷക്കാരായ ആളുകൾക്കു് പരസ്പരം ആശയവിനിമയം ചെയ്യുന്നതിന്നു ഒരു പൊതുഭാഷയുണ്ടായേ കഴിയൂ. ആ പൊതുഭാഷ എന്തായിരിക്കണമെന്നാണ് പ്രശ്നമെങ്കിൽ ഹിന്ദിയാക്കുകയാണ് ഏററവും പ്രായോഗികമായിട്ടുള്ളതു്. ഇന്ത്യയുടെ ഔദ്യോഗികഭാഷയാകേണ്ട ഹിന്ദിയെ യാതൊരു ഉദാസീനതയും കൂടാതെ പ്രോത്സാഹിപ്പിക്കാനും പ്രചരിപ്പിക്കാനും സ്റ്റേററ ഗവമ്മേണ്ടു് നടപടിയെടുക്കണമെന്നും അങ്ങിനെ ഭരണഘടന നിശ്ചയിച്ചിട്ടുള്ള 15 കൊല്ലത്തിനകംതന്നെ ഹിന്ദി ഔദ്യോഗികഭാഷയാക്കാൻ ശ്രമിക്കണമെന്നും അഭിപ്രായപ്പെട്ടുകൊണ്ട് എന്റെ പ്രസംഗം അവസാനിപ്പിച്ചുകൊള്ളുന്നു.

1-25 p.m.

* SRI K. R. VISWANATHAN : കണം ഉദവി തലൈവർ അവർകളേ, നമ്പ് ഇന്ത്യ നാട്ടിൽ ഹിന്ദി മൊഴിയെ നാളടൈവിൽ എപ്പടി അരചാങ്ക മൊഴിയാകക്കൊണ്ടുവരുവതു എൻപതു പറ്റി ഇങ്കുള്ള ഉറുപ്പിനർകളിൻ കരുത്തുക്കൾ കേട്കപ്പട്ടു വരുകിറതു. ആകവേ, എൻനുടൈയ കരുത്തുക്കളൈയും നാൻ ഇന്ദച്ചബൈ മുൻ വൈക്ക വിരുമ്പുകിറേൻ. അരചാങ്ക മൊഴിയാക, അതുവും രാജ്യ ചർക്കാർകളിൻ അരചാങ്ക മൊഴിയാക എന്ത മൊഴിയൈ കൊണ്ടു വരവേണ്ടും എൻപതൈപ്പറ്റി കരുത്തുവേറുപാടു കിടൈയാതു. അന്ദന്ദ രാജ്യങ്കളിൽ ഇരുക്കിറ ചട്ട ചബൈകളിൽ ; നീതിമൻറങ്കളിൽ, പള്ളിക്കൂടങ്കളിൽ എന്ത മൊഴി അരചാങ്ക മൊഴിയാക

[Sri K. R. Viswanathan] [29th September 1955

இருக்க வேண்டுமென்றால், அந்தந்த பிரதேச மொழி தான் இருக்க வேண்டுமென்பதில் யாவரும் ஒன்று பட்ட கருத்துடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இப்போது என் இதைப்பற்றிய பிரச்னை எழ வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறதென்றால், இதுவரையிலும் நாம் நமது அரசாங்க மொழியாக ஆங்கிலத்தை வைத்துக்கொண்டிருக்கிறோம். ஆங்கிலேயர்கள் நமது நாட்டிற்கு வந்ததிலிருந்து ஆங்கிலத்தை கட்டாய பாடமாக்கி நம்மை படிக்கும் படியாக செய்திருக்கிறார்கள். ஆங்கிலம் கட்டாய பாடமாக இருந்ததால், நம் நாட்டிலுள்ள எல்லா மொழி மக்களும் ஆங்கிலேயர்களுடைய நாகரீகம், கலை இவற்றை மேற்கொண்டு தங்களுடைய மொழிகளை மறக்கத் தொடங்கினார்கள் என்று கூட சொல்ல வேண்டிய அவசியமிருக்கிறது. அதனால் தான் பிரதேச மொழியாகிய தமிழ் மொழியை பேசும் தமிழ் மக்கள், ஆங்கிலமொழி போய் ஹிந்திமொழி அரசாங்க மொழியாக வருமேயானால், எப்படி ஆங்கிலேயர்கள் தங்களுடைய நாகரீகத்தை, கலையை இந்த நாட்டு மக்களிடையே பரப்பினார்களோ, அதைப் போல் ஹிந்தி மொழி பேசும் மக்கள் தங்களுடைய நாகரீகத்தையும் மற்ற கலைகளையும் இங்கு பரப்ப, புகுத்த ஆரம்பித்து விடுவார்கள் என்ற அச்சமுடையவர்களாக இருக்கிறார்கள்.

இந்த ஹிந்தி மொழிப் பிரச்னையைப்பற்றி நமது நிதியமைச்சர் அவர்கள் விளக்கும்போது ஒவ்வொரு உறுப்பினரும் நாம் ஒரே இந்திய நாடு என்கிற முறையை கவனத்தில் வைத்துக்கொண்டு பேச வேண்டுமென்றார்கள். அந்த எண்ணத்தை நாம் மனதில் கொண்டிருந்தாலும் கூட ஆங்காங்கு இருக்கிற மொழிவாரி மக்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்றால், அவரவர்கள் தனிப்பட்ட மொழியை உடையவர்கள், அந்தந்த மொழி பேசப்படும் பிரதேசம் அவர்களுக்கு உரியது, மற்ற மொழி பேசக்கூடியவர்கள் அனுவசியமாக தன் மொழியைப் புகுத்தும் பொறுப்பில் குறுக்கிடுவார்களேயானால் அவர்களை ஜாக்கிரதையாக கவனித்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் கொண்டவர்களாக யிருக்கிறார்கள். இந்த எண்ணத்தின் காரணமாகத் தான், ஆந்திர மக்கள் பிரிந்து போயிருக்கின்றனர். மேலும், இன்றைக்கு இந்த மொழிவாரி மாகாண அமைப்பு பிரச்னை ஒரு கமிஷனால் தீர்மானிக்கப்பட வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். இந்த அளவில், இன்றைக்கு தேசீய மொழியாக, 14 மொழிகள் இருக்கின்றன. அந்த மொழிகளில் எந்த மொழியை தேசீய மொழியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கருதும்போது, பெருவாரியான மக்கள் நமது நாட்டில் ஹிந்தி மொழியை பேசுகிறார்கள், ஆகவே அதைத்தான் தேசீய பாஷையாக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டுவருகிறார்கள். 14 மொழிகளில், பெருவாரியான மக்கள் எந்த மொழி பேசுகிறார்கள் என்று Censes கணக்கு மூலம் எடுத்து அதற்கு பிறகு எந்த மொழி பெருவாரியான மக்களால் பேசப்படுகிறதோ, அந்த மொழியை தேசீய மொழியாகக்கொண்டு வரலாம் என்பது என்னுடைய கருத்து.

அதற்கு அடுத்த படியாக ஹிந்தி மொழியை பள்ளிக்கூடங்களில் கட்டாய பாடமாக வைக்க வேண்டுமென்று சில அங்கத்தினர்கள் கூறினார்கள். அம்மாதிரி கட்டாயமாக படிக்க வேண்டுமென்று வைப்பது தகாது என்று நான் நினைக்கின்றேன். இன்று ஆங்கிலப்பாடம் கட்டாயமாக இருப்பதால் பல மாணவர்கள் தங்களுடைய திறமையை வளர்த்துக்கொள்ளவும், முழுக் கருத்துக்களை நல்ல முறையில் எடுத்துக்காட்ட முடியாமலும் இருக்கிறது. ஆகவே ஆங்கிலம் கட்டாய பாடமாக இருப்பது அவர்களுடைய வளர்ச்சியை தடைப்படுத்த காரணமாயிருக்கிறது. உதாரணமாக பார்ப்போமேயானால், இன்றைக்கு S. S. L. C. பரீட்சையில் தோல்வி அடையும் மாணவர்களில் பெரும்பாலோர் மற்ற எல்லா பாடங்களிலும் தேறியிருப்பார்கள். ஆனால் ஆங்கிலத்தில் மாத்திரம் தேறியிருக்கமாட்டார்கள்.

DEPUTY SPEAKER : The hon. Member can continue his speech to-morrow.

The House will now adjourn to meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.